# வீறுகவியரசர்
# முடியரசன் கவிதைகள்

## பொருண்மை வகைத் தொகுப்பு
## (இயற்கை)

தொகுப்பாசிரியர்
பாரி முடியரசன்

# உள்ளுறை

பக்கம்


பதிப்புரை
முன்னுரை

**இயற்கை**

1. அழகின் சிரிப்பு
2. இயற்கைத் தாய்
3. எழில்
4. நிலவு
5. காற்று
6. ஆறு
7. கடல்
8. மயிலே!
9. இயற்கையின் எழுச்சி
10. முகிலிடை நிலா
11. தேடிய எழில்
12. ஆடு மயிலே!
13. காலைக் கதிரவன்
14. மாலை நேரம்
15. நானே அரசிருப்பேன்
16. யாரடியோ?
17. மலர் தந்த பாடம்
18. அருகில் அவளிருந்தால்
19. நல்ல உலகமடா!
20. நீரின் பெருமை
21. பறம்பு மலை
22. விண்குடும்பம்
23. நெல்லின் கதை
24. மரத்தின் பெருமை
25. புகைப் புராணம்
26. களிதரும் சுரும்பு
27. கல் சொன்ன கதை
28. கடலின் பெயர்கள்
29. மலையிற் பிறந்த மகள்
30. வான் மழையே வா


# இயற்கை

[வீறுகவியரசர் முடியரசனார் ‘இயற்கை’ பற்றிப் பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. அழகின் சிரிப்பு
(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

அலைகடலின் அப்புறத்தே ஓரக் கோட்டில்
அடரிருளை அகற்றியபின் கிழக்கு வானில்
கலையாத செந்நிறத்தைப் பூசி விட்டுக்
காதலியைக் காணவரும் காத லன்போல்
தலைகாட்டிக் கதிரவன்தான் சிரித்துக் காட்டும்
தன்மையினில், மகிழ்வூட்டும் அழகு தன்னில்
கலையழகு சிரித்துவிளை யாடக் கண்டு
கழனிகளின் வரப்போரம் நடந்து சென்றேன் 1

முழந்தாளிற் கையூன்றிக் குனிந்து நின்று
முன்தானை எடுத்திடையில் இறுகக் கட்டிச்
சுழன்றாடும் குழல்மாதர் கால்வ யிற்றுச்
சோற்றுக்கு நாற்றுநடும் போது தன்னால்
எழுந்தாடும் கையசைவில், வீட்டுக் காரன்
ஏர்பிடித்துக் களைத்திருப்பான் என்று சொல்லி
விழுந்தோடி உணவுகொண்டு வந்த பாவை
விளையாடி உணவூட்டும் காட்சி தன்னில், 2

நீர்சேந்தி நிறைத்தகுடம் இடுப்பில் வைத்து
நெளியஒரு கைவீசிச் செல்லும் சிற்றூர்
சேர்மாதர் மென்னடையில், குருவி காக்கை
செழுங்கதிரைத் தின்னாமல் காப்ப தற்கு
வார்தொடுத்த கவண்வீசிக் கூவுங் காலை
வாயெழுப்பும் இசைக்குரலில், மண்ணை வெட்டி
நீர்கட்டும் தொழிலாளி நீள்பு யத்தில்
நின்றுநடம் செய்கின்ற அழகைக் கண்டேன் 3

கால்முளைத்த தாமரையின் மொக்குள் போலக்
காட்சிதரும் குஞ்சுகள்தம் வாயில் கோழி
வேல்மூக்கால் அன்புகலந் திரையை யூட்டும்
வேளையிலும், வானத்து வீதி செல்லும்
பால்மதியப் பெண்தனது விண்மீன் என்னும்
பல்விரித்துச் சிரிக்கின்ற போதும், மண்மேல்
கால்மடித்துத் தவழ்கின்ற குழந்தை பேசும்
காலத்தும் நல்லழகின் சிரிப்பைக் கண்டேன் 4

வெம்புலியின் பாய்ச்சல்தனில், வீரன் ஏந்தும்
வேல்நுனியில், தோள்வலியில், படம்வி ரித்து
வெம்பிஎழும் நாகத்தின் ஆட்டந் தன்னில்,
விரிகொம்பு மான்விழியில், தேனை உண்ணத்
தும்பிஎழுந் தார்க்கின்ற முல்லைக் காட்டில்;
தோகைவிரித் தாடுகின்ற மயிலி டத்தில்,
செம்பவழக் கொடிக்கடலின் அலைக்கூட் டத்தில்
சேர்ந்திருக்கும் அழகெல்லாம் சிரிக்கக் கண்டேன் 5

இங்கெல்லாம் சிரிக்கின்ற அழகு கண்டேன்
இனியதமிழ் பேசுகின்ற மனிதன் வாழ்வில்
பொங்கிவரும் அழகில்லை! உழைத்துண் டாக்கும்
பொருளெல்லாம் பிறர்நுகரப் பெற்ற தாலோ
தங்கள்குலம் வாழாமல் சுரண்டு வோரைத்
தரைமட்டம் ஆக்கஎழும் எண்ணத் தாலோ
மங்குமவன் முகத்தினிலே சிரிப்பும் இல்லை!
மனிதரினம் விலங்கினமாய் வாழல் நன்றோ? 6

மக்கள்நலம் பேணுகின்றோம் என்று சொல்லி

மணிப்பீடம் ஏறிவிட்டோர் மதத்தின் பீடம்
தக்கதுணை என்றெண்ணி அயர்ந்து விட்டார்;
தறிகெட்டுத் திரிகின்றார், மேடை ஏறிக்
கொக்கரித்தல் ஓயவில்லை; சட்டத் தாலும்
கொடுமைகளும் மாயவிலை; அறிவு மாய்க்கும்
அக்குணத்தார் ஆட்சியிலே அழகும் இல்லை
ஆதலினால் வாழ்க்கையிலே சிரிப்பும் இல்லை! 7

ஆற்றாலும் மலையாலும் சோலை யாலும்
அழகுசிரித் தாடுகின்ற நாட்டில் வாழ்வீர்!
சோற்றாலே துயருறுவோர் தமிழர் என்னும்
சொற்கேட்டுத் துடித்திலதோ உங்கள் உள்ளம்?
மாற்றாரின் காலடியில் நாட்டை விட்டீர்!
மடிகின்றீர்! இக்கேட்டை அழிக்கும் எண்ணம்
தோற்றாதோ உங்களிடம்? அடிமை வாழ்வு
தொலையாதோ? அழகிங்கே சிரிப்ப தென்றோ? 8

---

**பாடற் குறிப்பு:–** கோவையில் 1950 மே 27, 28 தேதிகளில் பாவேந்தர் பாரதிதாசனார் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுக் கவியரங்கில் முதற் பரிசில் பெற்றது இக்கவிதை. பாவேந்தருடன் நாவலர் சோமசுந்தர பாரதியார், பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் ஆகியோரும் கவிதைத் தேர்வுக்குழுவில் இருந்தனர். விளம்பரமடைந்த திரைப்படக் கவிஞர்கள் உட்படப் பல சிறந்த கவிஞர்கள் இக் கவியரங்கில் கலந்து கொண்டனர். வாணிதாசனுக்கு 2ஆம் பரிசு.

## 2. இயற்கைத் தாய்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

புனல்நிறைந்த தடமலர்கள், படர்கொடியிற்
பூத்தமலர், கோட்டுப் பூக்கள்
இனையபல மலர்நாறும் மணமானாள்
இருநிலத்துப் பொருள்கள் தோறும்
மனங்கவர்ந்து நிறைந்திருக்கும் எழிலுருவம்
அவளுருவாம், மலையில் வாழ்வாள்
எனைமகனாப் பெற்றெடுத்தாள் முருகென்னும்
எழிற்பேரும் உடையாள் வாழ்க! 1

அழுக்காறாம் எறும்பூரும், பொய்மைஎனும்
அறுகால்சேர் ஈக்கள் மொய்க்கும்,
இழுக்கேறா நல்லறிவுப் பசிதோன்றும்
இத்தனையும் தாங்க ஏலா
தழுதிடுவேன்; விரைந்தோடி என்பால்வந்
தன்பென்னும் முலைசு ரந்த
பழுதில்லா முப்பாலை ஊட்டிடுவாள்
பார்புரக்கும் தாய்மை வாழ்க! 2

*தென்றலெனும் தொட்டிலிலே எனைக்கிடத்தித்
தேன்நுகர மலர்கள் தோறும்
சென்றிருந்து தமிழ்பாடும் வண்டொலியால்
செவிகுளிரத் தாலே தாலோ
என்றினிய தாலாட்டித் துயிற்றிடுவாள்;
எழுந்தழுதால் ஆறு காட்டிக்
குன்றிருந்து வீழருவி, கடல்காட்டிக்
கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி. 3

இளங்காலை இருட்கதவம் திறந்துநோக்கி
இன்னுமெழ வில்லை யோஎன்
றுளஞ்சினந்து முகஞ்சிவந்து கதிர்க்கரத்தால்
உறக்கத்தில் எழுப்பு வாள்தாய்,
குளறிஎழுந் தன்னவளை வைதிடுவேன்,
கோணாமல் அன்பு கூர்ந்து
முளரிமுகங் காட்டிடுவாள் முத்தமிழால்

வைதோர்க்கும் வாழ்வே தந்தாள்; 4

விடிபொழுதில் ஆறென்னும் கைநீட்டி
விளையாடிக் குளிக்க வா! வா!!
பிடிவாதம் செய்யாதே என்றழைப்பாள்,
பேசாமல் நானி ருந்தால்
இடியொலியால் உறுத்ததட்டி மழைத்துளியால்
எனைநனைத்து நீரும் ஆட்டிக்
கொடிநிகர்த்த மின்னொளியால் நகைத்திடுவாள்
கூத்தாடி நான்கு ளிப்பேன் 5

குளிர்மிகுந்து நடுக்கமுறின் மனந்தளர்வாள்
கொணர்ந்திடுவாள் ஞாயி றென்னும்
ஒளிநெருப்பை! குளிர்காய்வேன், அதன்பின்னர்
மலர்க்காட்டுள் ஓடி ஓடி
நளிமலருள் நிறைமணத்தை வாரிவந்து
நான்மகிழ உடலிற் பூச
அளிதென்றல் உருவோடு வருவாள்தன்
அன்பினைத்தான் உரைத்தல் ஆமோ? 6

படித்திடுக எனச்சொல்லிக் குயிலினங்கள்
பசுங்கிளிகள் இவற்றைத் தந்தாள்;
பிடித்தவற்றைப் பார்க்கையிலோர் அறங்கண்டேன்;
'பேசுமொழி சொந்த மேயாம்
அடுத்தவற்றின் குரலல்ல நீயுமுன்றன்
அனைமொழியால் பேசு! பாடு!!
தடுப்பவர்யார்?' என்றனஅவ் வேடுகள்தாம்
தாயேதாய் மொழியே வாழ்க! 7

விண்ணரங்கிற் கருமுகிலாம் திரைநீக்கி,
விதவிதமா வானம் பாடி
பண்ணிசைக்க, ஒளிவீசிப் புடைசூழும்
பல்வகையாம் மீனப் பெண்கள்
கண்சிமிட்டி உடனாட, முழுநிலவுக்
காரிகையும் நடனம் ஆட
மண்ணகத்து மகவெல்லாம் களிகொள்ள
மனம்வைத்தாள் என்றன் அன்னை 8

வளைந்துள்ள வெண்ணிறத்துப் பிறைநிலவை
வானத்தில் கப்பல் என்று
தளைந்துள்ள முகிலலையின் நடுவிடத்தே
தவழ்ந்தோடச் செய்தாள்; இன்பம்
விளைந்துள்ளம் களிகூரப் பகலெல்லாம்
விளையாட இருட்பு லத்தைப்
பிளந்தெழும்பும் கதிரவனைப் பந்தெனவே
பிள்ளைஎனக் களித்தாள் அன்னை 9

கடற்கரையில் விளையாட இடந்தந்தாள்;
கலகலத்த இரைச்ச லோடு
படர்ந்தலைகள் கரைநோக்கி விளையாடப்
பாய்ந்துவரும், நானும் செல்வேன்,
மடங்கியொடுங் கிக்கடலுள் எமைக்கண்டு
பிடியென்று மறைந்து போகும்
அடங்கிடுவேன்; உடன்சிரித்து மற்றோர்பால்
அலையெழும்பும், அயர்ந்து போவேன் 10

மலையுறைவாள், அகங்கசிந்து நிலவுலகில்
மக்கள்பசித் திருப்ப ரென்று
நிலைகலங்கிக் கீழிறங்கி ஆறென்று
நெடுகநடந் தெவ்வி டத்தும்
கலைகுலுங்கக் கால்களினால் ஓடிமலர்க்
கண்மலர வயலிற் பாய்ந்து,
குலைகுலுங்கும் கதிர்க்கையால் உணவூட்டிக்
குறைநீக்கி மகிழ்வாள் அன்னை. 11

**பாடற் குறிப்பு:–** குன்றக்குடி விசாகத் திருநாள் கவியரங்கில் “முருகன் என் தாய்” என்ற தலைப்பில் பாடப் பெற்றது.
*இப்பாடல், சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## 3. எழில்

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

வளம்நிறைந்த தமிழ்மொழிக்கு விரும்பிச் சாத்தன்
வழங்குமணி மேகலையில் அவளுக் கென்றே
உளம்நிறைந்து முப்பொருளால் இளங்கோச் சேரன்
உருவாக்கித் தந்துமகிழ் சிலம்பில், கம்பன்
பழங்கதையை மெருகேற்றிப் பாரோர் போற்றப்
பாவையவள் மகிழவென்று தந்த நூலில்,
களங்கமின்றிக் கோவைசெய்து தேவன் தந்த
கலைசிந்தா மணியிலும்நான் எழிலைக் கண்டேன் 1

விண்முட்டும் கோபுரத்தில், அங்குச் சாந்து
வினைவல்லான் அமைத்தசுதைப் பாவை தன்னில்,
கண்ணெட்டும் போதாதோ எனுமா றாங்குக்
கற்றச்சன் வடித்தகருங் கல்லின் சிற்பம்,
பண்ணொட்டும் யாழேந்தும் கல்விப் பாவை
பரிந்துநடம் புரிந்தருளும் தோற்றந் தன்னை
எண்ணட்டும் இங்கிருந்தே என்ற நோக்கில்
எழுப்புகலைக் கூடத்தில் எழிலைக் கண்டேன் 2

கண்ணொன்றால் காவியத்தை ஆக்கிக் காட்டும்
காரிகையார் நடையுடையில் எழிலின் தேக்கம்,
மண்தின்றால் தீமைஎன அறியாப் பிள்ளை
மழலைமொழிப் பார்வைகளில் எழிலின் ஓட்டம்,
விண்சென்று மீளுகின்ற பட்டம் விட்டு
விளையாடும் சிறுசெருவில் எழிலின் பாய்ச்சல்,
தண்ணென்ற புனலோடைச் சலச லப்பில்
தகுமெழிலின் பளபளப்பு விளங்கக் கண்டேன் 3

சுடர்விட்டுக் காட்டுகின்ற கதிரோன் தோன்றச்
சுருக்கவிழ்ந்து சிரிக்குமுகத் தாம ரைக்குள்
கடன்பட்ட மாந்தரிடம் வட்டி கேட்கக்
கடைதோறும் புகுந்துவரும் கணக்க னைப்போல்
இடம்விட்ட மலர்தோறும் சென்று தேனை
இனிதுறிஞ்சி இசைபாடிச் செல்லும் தும்பி
அடைபட்டுக் கிடக்கவெனக் குவிந்து கொண்ட
அல்லிமலர்க் கூட்டத்துள் அழகு கண்டேன் 4

விண்பரப்பில் மீன்நடுவே ஒளியைக் கான்று
மென்னடையில் நிலவுப்பெண் ஊர்ந்து செல்ல
மண்புரக்கும் வேலியென அமைந்த வேலை
மடிந்துமடிந் தலைஎழுப்பிக் கரையில் மோத,
மண்பரப்பில் எழுப்பியுள வலைஞர் சிற்றில்
மனைவியின்பால் விடைபெற்றுத் தோணி ஏறிக்
கண்மறைக்கும் நெடுந்தொலைவு கடலுள் ஏகிக்
கடும்புயலும் சுறவினத்தின் வாயும் தப்பி, 5

மீன்பிடித்துக் காதலன்தான் மீள்தல் கண்டு
மீள்வாரோ? மீளாரோ? எனத்த ளர்ந்த
மான்படித்த பார்வையினாள் அகத்துள் பொங்கும்
மகிழ்ச்சிஎல்லாம் வெளிக்காட்டும் முகத்தி டத்தே
தான்நடித்தாள் எழிலணங்கு; தந்தை முன்னர்த்
தள்ளாடி நடந்தோடி அப்பா! என்று

தேன்வடித்த சொல்லாலே குழந்தை கூவத்
திரும்பினவன் முகத்தகத்தும் எழிலைக் கண்டேன் 6

கொடிதாங்கி உரிமைப்போர்க் களத்துச் சென்ற
குமரனவன் உயிர்நீங்க ஆள்வோர் தந்த
அடிதாங்கித் தலையிழிந்து கொட்டும் செந்நீர்,
அடிமையெனும் சிறுமையினை அழிப்பான் வேண்டி
நெடிதோங்கும் பிறனாட்சி தொலைக்கும் போரில்
நின்றிருந்த பெரியோன்தன் அகன்ற மார்பு
வெடிதாங்கிச் சிந்துகின்ற குருதி, யார்க்கும்
விளங்காத எழில்காட்டக் கண்டேன் கண்டேன் 7

''மனவிருளை அகற்றிடுக சிந்தித் தாய்க!
மறைப்பின்றி உரைத்திடுக! இங்ஙன் செய்யின்
நனவுலகில் மனிதரென வாழ்வோம்!'' என்று
நவின்றவனை ''அடைத்திடுக கொடுஞ்சி றைக்குள்''
எனவுரைத்துக் கொடுநஞ்சைக் கொடுத்தான் வேந்தன்
''எனதுயிரிற் பெருங்கொள்கை விடுதல் ஏலேன்
சினவுயிரை விடுதல்எனக் கெளிதாம்'' என்று
செப்பிஅவன் குடித்தெறிந்த கிண்ணத் துள்ளே 8

நாட்டுக்குச் செய்தபெருந் தொண்டுக் காக
நரிக்குணத்தர் அவற்களித்த துக்கு மேடை
காட்டுகின்ற சுருள்கயிற்றில், இறந்து பட்ட
காளையவன் சவக்குழியில், எலும்புக் கூட்டில்,
நாட்டிற்காச் செக்கிழுத்து மெலிந்த தோளில்,
நல்லதமிழ் நாட்டெழுந்த இந்திப் போரில்
தேட்டாளர் முகங்களிலே அறுத்தெ றிந்த
திருத்தாலிக் கயிற்றில்நான் எழிலைக் கண்டேன். 9

---

**பாடற் குறிப்பு:–** காரைக்குடி அழகப்பர் கலைக்கல்லூரிக் கவியரங்கில் பாடப்பெற்ற பாடல்.

## 4. நிலவு
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

ஒளிமிகுந்த குளிர்நிலவே! உன்னைக் கண்டேன்
உள்ளமெல்லாம் உவகையுற இன்பங் கொண்டேன்;
களிமிகுந்த காதலருக் கின்பத் தோணி!
கடைந்தெடுத்த வெண்முத்தம் நின்றன் மேனி;
தளிர்போலும் குழவிகளின் கதறல் நீக்கும்
தாயர்தமக் குதவிடுவாய்! உலகைக் காக்கும்
எளிமைமிகு தொழிலாளர் அயர்ந்த போதில்
எழுந்துமுகம் காட்டிமகிழ் வூட்டும் மாது! 1

ஒருபொழுதும் வயிராற உண்ணல் காணா
துயிர்நிற்க இரந்துண்ணும் ஏழை, திங்கள்
வருபொழுது அரைவயிறு மட்டும் உண்டு
வருந்துகிற உழைப்பாளி, நிறைய உண்ணும்
பெருவயிற்றுப் பணக்காரன் யாவ ரேனும்
பிழையாது நிலவளித்து மாட மீதும்
சிறுகுடிசை மீதுமொளி வீசி இன்பம்
சேர்க்கின்ற பொதுவுடைமை ஆட்சி கண்டேன் 2

*பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்
புரிகின்ற முழுமதியே! உன்னைக் கண்டு
மதுவுண்ட வண்டானேன்; இன்பப் பாடல்
வாய்குளிர மனங்குளிரப் பாடி நின்றேன்;
புதுவுலகம் விரைவினில்நாம் காண வேண்டின்
பொலிவுபெறும் முழுமதியர் ஆட்சி வேண்டும்

இதுவுண்மை என நினைந்தேன்; களங்கம் உன்பால்
இருக்கின்ற தெனஒருவன் இயம்பினேனே! 3

நிறைமதியர் நிலவுலகம் நிலைக்குங் காறும்
நீள்புகழால் ஒளிபரப்பு வார்,இவ் வுண்மை
நிறைமதியம் இரவிங்கு நிற்குங் காறும்
நெடுங்கதிரால் ஒளிபரப்பிக் காட்டும்; மேலும்
குறைமதியர் புகழெல்லாம் வெளிப்ப கட்டாய்க்
குறைந்துவிடும் மிகவிரைவில் என்ற உண்மை
குறைமதியம் சிறுநேரம் பகட்டி வானிற்
கூத்தாடி மறைந்துநமக் கெடுத்துக் காட்டும் 4

மதியுடையார் பேசுவதைக் கேட்டல் நன்று
மாண்புவரும் எனக்குழுமும் விண்மீன் கூட்டம்;
அதுமகிழ வானத்து மேடை ஏறி
அம்புலியார் சொற்பொழிய, முகிலன் ஓடி
எதிரியெனக் கூட்டத்துள் ஒளிம றைத்தான்,
இடியிடித்தான், குழப்பத்தை ஆக்கி விட்டான்;
இதிலென்ன கண்டனனோ? மதியர் நாளை
ஏறாமல் இருப்பாரோ மேடை மீது? 5

நிலவணங்கே! உனைக்கதிரோன் கூடுங் காலை
நீலமுகிற் குழல்தளரக் கட்ட விழ்ந்து
பொலபொலவென் றுதிர்ந்தநறு மலர்கள் தாமோ
பூத்திருக்கும் விண்மீன்கள்? வானம் நீங்கள்
நலம்நுகரும் பஞ்சணையோ? கதிரோன் எங்கே
நடந்துவிட்டான்? உதிர்மலரை மீண்டும் சேர்த்துக்
குலமாலை யாக்குதற்கு மின்னல் நாணைக்
கொண்டுவரச் சென்றனனோ? கூறாய் தோழி! 6

வானத்துத் தாயென்பாள் கதிரோன் என்ற
வம்படித்து விளையாடித் திரியும் சேயைச்
''சீனத்துச் சிறுகிளியே! செங்க ரும்பே!
செய்யாதே வீண்வம்பு புசிக்க வா''வென்
றேனத்துச் சோறிட்டாள்; சிறுவன் ஓடி
எற்றிவிடச் சிதறியவெண் சோறு போல
மீனத்துக் குழுவெல்லாம் விளங்கும்! வீழ்ந்த
வெள்ளித்தட் டாமென்ன நிலவு தோன்றும் 7

முகிலென்னும் துகிலுடுத்து நாணம் ஓங்க
முகம்மறைத்துச் செல்கின்ற பெண்ணென் பேனோ?
நகில்கொண்ட அல்லிப்பெண் முகம லர்ந்து
நகைகாட்டப் பிறரெவரும் அறியா வண்ணம்
பகல்மறைந்து முகில்நுழைந்து செல்லு கின்ற
களவொழுக்கத் தலைவனெனப் பகரு வேனோ?
மிகுவிண்மீன் வயிரங்கள் கொள்ளை கொள்ள
முகில்பதுங்கும் திருடனென விளம்பு வேனோ? 8

---

**பாடற் குறிப்பு:–** *இப்பாடல் சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## 5. காற்று

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

இரவலர்கள் எவரேனும் வருவாரோ
என்றஞ்சிக் கதவ டைக்கும்
புரவலர்கள் சாளரத்துக் கதவுதனைப்
பூட்டாது திறந்து வைத்து
வரவுரைகள் கூறுகின்றார் காற்றுக்கு;
வரவிலையேல் பணத்தை வீசி

இரவுபகல் மின்விசிறி கொண்டவர்கள்
எப்பொழுதும் சுழற்று கின்றார் 1

செலவழித்துப் பெற்றாலும் இயற்கைமணம்
சேர்காற்றைப் பெற்றிட் டாலும்
இலவளித்த பஞ்சணையார் மென்காற்றில்
இழைந்திருக்கும் சுகத்தை எள்ளின்
அலகனைத்தும் அறிவாரோ? சுரங்கத்தில்,
ஆலைகளில், உலைக்க ளத்தில்,
பொலபொலக்க உடல்வியர்க்க உழைப்பவரே
பொலிநலத்தைக் காண்பா ராவர் 2

குளிர்நிலத்தில் மலர்ச்செடியில் உராயுங்கால்
குளிர்மணத்தை வீசும் காற்று;
வெளியிடத்திற் சுடுநிலத்தில் வரும்பொழுது
வெப்பத்தை வீசிச் செல்லும்;
அளியகத்தே மிகுசான்றோர்ச் சார்பவரும்
அறநெறியர் ஆவர்; தீமை
நெளிமனத்தர் தமைச்சார்வோர் இவ்வுலகில்
நேர்மையிலா வழியே சார்வர் 3

பருவஎழில் மலர்ந்துள்ள பெண்ணொருத்தி
பதியின்பால் புலந்து கண்ணீர்
பெருகஉதிர்த் தசையாமல் நிற்பதுபோல்
பெருந்துணர்ப்பூஞ் செடிகள் எல்லாம்
மருமலர்கண் ணீர்சிந்தித் தலைசாய்த்து
மணமின்றி நிற்கும், பின்னர்
அருகணையும் கணவன்வந் தவளிதழை
அசைக்கின்ற போழ்து மங்கை, 4

*இதழ்விரித்து நகைகாட்டல் எனத்தென்றல்
இனிதாகச் செடிகள் மீது
மெதுவாகத் தடவஇதழ் விரித்தரும்புப்
பல்காட்டும்; மேலும் வண்டு
பதம்பாடச் செடிகொடிகள் நடமாடப்
பரிந்தவற்றை மணக்கும் தென்றல்;
இதுபிறந்த மலைஎங்கள் தமிழகமே
எனும்போது சிலிர்க்கும் உள்ளம் 5

ஐம்பூதத் தொன்றான காற்றிலையேல்
அம்புவியில் இயக்கம் ஏது?
தெம்பேது மக்களுக்கு? துயில்பவனைத்
தெருளில்லா இரவுப் போதில்
நம்பூறும் படிஅவனோர் பிணமல்லன்
எனுந்திறத்தை நவில்வ தெல்லாம்
மென்பூவின் மூக்கில்வரும் காற்றன்றோ?
மேதினியே காற்றால் வாழும். 6

பணிவோர்க்குக் காப்பளித்து பணியாரை
வேரறுப்பர் பண்டை எங்கள்
அணிசேர்க்கும் முடியரசர்; பெருவளியும்
அடிக்குங்கால் ஆற்றின் நாணற்
பணிவேற்றுக் கொண்டங்குத் தலைநிமிர்ந்த
பனைதென்னை மரங்கள் யாவும்
அணிவேரற் றடிவீழச் செய்திடுமால்;
ஆருக்கும் பணிதல் நன்றாம், 7

நீர்கொண்ட மேகத்தைக் கடலினின்று
நெடுந்தொலைவு உந்தி வந்து
பேர்கொண்ட மலைப்பாங்கிற் சேர்ப்பதுவும்
பின்னுமதைக் குளிரச் செய்து
நீர்கொட்டச் செய்வதுவும் காற்றன்றோ?
நீணிலத்துச் சான்றோர் என்ற
பேர்பெற்றோர் அடுத்தடுத்து நன்மைகளே

பேணிவந்து செய்தல் காட்டும்; 8

வடக்கிருந்து வருவாடை வாட்டுவதும்
தெற்கில்வரும் தென்றல் இன்பம்
கொடுப்பதுவும் காட்டுமொரு பேருண்மை,
கொடுமையிலாத் தமிழ் நாடும்
வடக்கிருந்து வருபவையால் துயருழந்து
வாடுவதும் தெற்கோ இன்பம்
படைப்பதுவும் நாடறியும், உயர்வாம்இப்
பண்புணர்த்தும் தென்றல் வாழ்க! 9

---

**பாடற் குறிப்பு:–** *இப்பாடல் சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## 6. ஆறு
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

பகல்முழுதும் வெயில்காய்ந்து மேற்பால் சேரும்
பகலவனை வழியனுப்பிக் கீழ்ப்பால் திங்கள்
முகமெழுப்பும் வேளைதனில் மகிழ்வு கூட்ட
முரணில்லா யாழெடுத்தாள் காதல் நல்லாள்;
முகம்சுழித்தேன், “ஏனென்றாள்?,” “கவிதை யாக்க
முயல்கின்றேன் நீபாட முனைதல் நன்றோ?
தகவிதுவோ?” எனவுரைத்தேன்; யாழை வைத்தாள்;
“தளிர்க்கரத்தாய்! என்னுடன்வா” என்ற ழைத்தேன் 1

அவளுடன்நான் கற்பனையில் மிதந்து சென்றேன்
“அத்தான் !ஓர் ஐயமுண்டு, செய்யுள் யாக்கக்
கவலைதரும் இலக்கணமேன் வேண்டும்?” என்றாள்;
“காரிகையே! ஆற்றுக்குக் கரையேன் வேண்டும்?
சுவர்போலும் கரையிலையேல் ஆற்றின் தன்மை
என்னாகும் சொல்லிடுக! ஊர்பாழ் அன்றோ?
அவமின்றி மொழிவிளங்கக் கவிதை என்னும்
ஆற்றுக்கும் இலக்கணமோர் கரையே யாகும்; 2

பாவலன்தன் கவிப்பொருளைப் பாடுங் காலை
பாட்டகத்தே இலக்கணமும் அமைதல் வேண்டும்
ஆவலுடன் கவிபுனைவோர் இலக்க ணத்தை
அருகில்வைத்துப் பெருங்கவிஎன் றெண்ணிக் கொண்டு
தாவுகின்றார் பாடுதற்குத் தவறி வீழ்ந்து,
தகுபுலவோர் இலக்கணத்தைப் புதைத்து விட்டுக்
கூவுகின்றார் ஒப்பாரிக் குரலெ டுத்து;
கொடுமையிது! கவிஞன்தன் மரபும் அன்று!” 3

“பண்டிதர்வே றென்னசொல்வார்? தமிழை எங்கும்
பரவவிட மனமில்லார்” எனந கைத்தாள்;
“அண்டவந்த பிறமொழியால் தமிழை மக்கள்
அயர்த்தடிமை ஏற்றிருந்த போது காத்துக்
கொண்டிருந்த பண்டிதனைக் குறைசொல் கின்றாய்!
குறைமதியைத் தலைக்கொண்டாய்! கவிஞ னும்யார்?
பண்டிதன்தான், உளறாதே! மொழியாம் ஆற்றில்
படிந்தெழுந்தால் உன்மடமை கரைந்து போகும்; 4

சிறுநெஞ்சில் ஊற்றெடுத்து மேனி எங்கும்
செழிப்பதற்குக் கிளைத்தோடும் குருதி யைப்போல்
குறுகிடத்தே தோன்றிப்பின் நாட்டில் செல்வம்
கொழிப்பதற்குக் கிளைத்தோடும் ஆறு, வெற்பில்
விறுவிறுக்க அருவியெனப் பாறை மீது
வீழஅது கல்லாகி, ஓட ஓடக்
குறுமணலாய், ஒன்றுதிரிந் தொன்றாம் என்ற

குவலயத்தின் பரிணாம உண்மை காட்டும்; 5

மேற்றிசையில் செந்நிறத்தைக் கதிரோன் பாய்ச்சும்
வேளையிலே அவ்வொளியை ஆறு தன்மேல்
ஏற்றுனது மெய்வண்ணம் காட்டி, ஒவ்வோர்
இடங்களிலே நெளிந்தோடி இடையைக் காட்டி,
நாற்றுநிறை வயல்களுக்குப் பிரிந்து சென்று
நாள்வருவாய்க் கால்காட்டி, ஓடை மீது
காற்றுரசச் சலசலவென் றோடுங் காலை
களிநடஞ்செய் காற்சதங்கை ஒலியைக் காட்டி 6

கரையோரம் அலைக்கையால் வாரி விட்ட
கருமணலால் சுருள்கூந்தல் காட்டி, வெள்ளை
நுரைசேரும் புனல்தள்ளும் சங்கி னத்தின்
நுண்சினையால் பல்காட்டி, ஓடி ஓடி,
இரைதேடும் கயல்மீனால் கண்கள் காட்டி,
இறுமாந்து செல்லுங்கால் தன்பால் செந்தா
மரையின்றி முகங்காட்ட முடியா ஆறு
மாய்வதற்குக் கடல்நோக்கி ஓடு தல்பார்! 7

*ஊர்மக்கள் வெறுத்தொதுக்கும் கழிநீர் எல்லாம்
ஓடிவந்து கலந்தாலும் மாசு நீங்கி
ஊர்விட்டு நீங்குகையில் தூய்மை யாகி
ஊர்ந்துசெலும் ஆறுகண்டு தமிழைக் காண்பாய்!
சார்பற்றுத் தனித்தியங்க வல்ல என்றன்
தமிழ்மொழியில் பிறமொழிகள் கலந்த போதும்
நேர்வுற்று மாசின்றி இயங்கும் பண்பை
நினைப்பூட்டும் ஆற்றுக்கு வாழ்த்துக் கூறு! 8

வாழ்த்தென்று கூறுகையில் பழைய எண்ணம்
வாட்டுதடி! நம்முன்னோன் ஆட்ட ணத்தி,
காழ்த்தபகை நீக்குவிறல் சோழன் பெற்ற
கனிஆதி மருதியுடன் ஆற்று வெள்ளம்
ஆழ்த்திவிடும் என்றுணரா தாடச் சென்றான்;
அவள்கண்ணீர் ஆறாக அவனைக் கொன்ற
பாழ்த்துறைபார்! இலக்கியமாம் ஏட்டுச் செல்வம்
அழித்தொழித்த பதினெட்டாம் பெருக்கை யும்பார்! 9

கடிதோடும் வெள்ளத்தால் ஊரின் செல்வம்
கரையின்றி அழிந்தொழியக் கண்டு நொந்து
முடியரசன் கரிகாலன் மக்கள் வாழ்வு
முந்துறவே இருமருங்கும் எழுப்பித் தந்த
நெடிதோங்கு கரைகளைப்பார்! அவனின் றில்லை
நிலைத்துநின்ற தவன்பணியே; ஆத லாலே
படியாள்வோர் புவியாட்சி மாறும் உண்மை
படித்திடுக! பயனுள்ள செயலே செய்க! 10

உருக்குலைய உழைத்துழைத்துச் செல்வம் இல்லா
உழைப்பாளர் வாழ்வினைப்போல் வறண்டு தோன்றும்
பெருக்கில்லா காட்டாறு காண்பாய்! ஈகை
பேணாத பெருஞ்செல்வர், மிடியால் வாடி
இருப்பவர்க்குப் பயனில்லா தொழிதல் போல
எரிகதிரால் வதைந்தவர்க்கு நிழலொன் றீயா
திருக்குமரம் கரைகளிற்காண்! வறுமை யுற்றோன்
இளமைஎன வதங்குசெடி கொடிகள் காண்பாய்! 11

கடற்கணவன் எங்குள்ளான் என்று தேடிக்
கதறிக்கொண் டோடுகின்ற ஆற்றுப் பெண்ணாள்
தொடக்கண்டு பெருங்கடலோன் அலைக்கை நீட்டித்
தோள்தொட்டான், மகிழ்வுற்றாள், பிரிவுத் துன்பம்
விடக்கண்டாள், ஒன்றாகக் கலந்து விட்டாள்;
வேறிடத்தே பிறந்துளநீ அறியா என்பால்
கடைக்கணித்துக் கலந்துவிட்டாய்! ஆறும் எங்கோ
உருவெடுத்தும் கடலோடு மணத்தல் காண்பாய்! 12

முப்பதுநாள் தமிழ்சொல்லிப் பள்ளிக் கூட
முதல்வர்தரும் ஊதியத்தைக் கடனுக் கெல்லாம்
ஒப்படைத்துப் பதினைந்து நாள்கள் ஒட்டி
ஒழிந்தசின்னாள் என்செய்வேன் என்ற எண்ணம்
கப்பிடநீ அருள்சுரந்துன் அன்னை தந்த
காப்பளித்துக் காப்பளித்தாய் அதுபோல் வானம்
தப்பியதால் பெருக்கற்றும் ஊற்று நீரால்
தரணியினைக் காக்கின்ற ஆறு காண்க! 13

மலைமீது தோன்றிப்பின் அருவி யாக
மன்னர்பகைப் போர்முரசம் என்ன ஆர்த்து,
நிலையாமல் ஒடிப்போய்க் கரையே யில்லா
நீர்க்கடலில் மறைகின்ற ஆறு கண்டேன்;
உலையாத உண்மைகண்டேன்; உலகில் தோன்றி
உருப்பெற்ற பொருள்ஒருநாள் மறைதல் உண்மை
கலைமானே! மறைவதன்முன் மக்கள் வாழ்வைக்
காக்கின்ற ஆற்றைப்போல் கடமை செய்க! 14

கிளர்ச்சிசெயும் தொண்டர்களின் உணர்ச்சி வெள்ளம்
கெடுவழியில் செல்லாமல் தடுத்து நன்கு
வளர்ச்சிபெறச் செய்கின்ற தலைவன் போல
வருவெள்ளப் பெருக்கனைத்தும் பாழ்ப டாமல்
அளப்பரிய நன்மைசெயத் தடுத்து நிற்கும்
அணைக்கட்டின் அழகைப்பார்! மனிதன் ஆற்றல்
விளக்குகிற செயலதுவாம்; இயற்கை எல்லாம்
வென்றாளும் மனிதர்திறம் என்னே! என்னே!! 15

ஒருதுறையில் ஆண்பாலர் மற்றோர் பக்கம்
உயர்மாதர் நீராடும் காட்சி யைப்பார்!
கருமுகில்வந் தமர்ந்ததுபோற் கிடந்த யானை
கழுவுகின்ற பாகனையும் அவனைச் சூழ்ந்து
சிறுவர்பலர் நீரிறைத்தே ஓடி ஆடிச்
செய்குறும்பும் காணடிநீ! இந்த ஆற்றில்
ஒருசாதிக் கொருதுறையுண் டென்ற கொள்கை
ஒழிந்ததையும் பாரடிநீ! செல்வோம் வாவா! 16

---

**பாடற் குறிப்பு :–** காரைக்குடி கம்பன் திருநாள் கவியரங்கில் பாடப் பெற்ற பாடல். *இப்பாடல் சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## 7. கடல்

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

கவலையொடு நின்பால்வந் தமர்ந்திருக்கும்
கடன்பட்ட மாந்தர் தம்மைத்
திவலையுடன் அலையெழுப்பி அக்கவலை
தீர்க்கின்றாய் காதல் வாழ்வில்
தவழ்கின்ற இளைஞர்க்கும் மணங்கொண்டார்
தமக்குமொரு சேர இன்பம்
உவக்கின்ற படியெல்லாம் கொடுக்கின்றாய்
உவர்க்கடலே இன்னும் கேட்பாய்! 1

தங்கத்தைப் பவழத்தை ஒளிமுத்தைத்
தளிர்க்கரும்பை நெல்லை எல்லாம்
துங்கத்தன் கைநீட்டித் தருகின்ற
தூயதமிழ் நாட்டை விட்டுச்
சிங்கத்தை நிகர்தமிழர் கூலிகளாய்ச்
சீர்கெட்டுச் செல்லு கின்ற
வங்கத்தைக் கண்டேயோ பொங்குகிறாய்?
வாய்திறந்து கத்து கின்றாய்? 2

எத்தனையோ அருநூல்கள் செல்லார்கட்
கிரையாக்கி விட்டோம், மேலும்
பித்தரைப்போல் மூடரைப்போல் பதினெட்டாம்
பெருக்கென்றும் ஆற்றி லிட்டோம்.
இத்தனையும் போதாமல் சங்கத்தில்
இருந்தவற்றை நீயும் கொண்டாய்!
கத்துதிரைப் படையெழுப்பி ஏனின்னும்
கரைநோக்கி வருகின் றாய்நீ? 3

சங்கத்து நிலவியநல் இலக்கியத்தை,
சகமெல்லாம் புகழ்ந்து போற்ற
வங்கத்து வணிகத்தால் ஓங்குபுகார்
வளமிக்க நகரை, எங்கள்
சிங்கத்தை நிகர்பன்னீர்ச் செல்வத்தைச்
செத்தொழியச் செய்தாய்! அந்தோ!
கங்கொத்தும் அலைகடலே! எமையிங்கு
கலங்கிமனம் இரங்க வைத்தாய் 4

அன்றிழைத்த தீமையெலாம் போதாவென்
றாவினங்கள் உயிர்போய் மாள,
நின்றிருந்த உயர்மரங்கள் வீடெல்லாம்
நிலைவீழ, மக்கள் தம்மைக்
கொன்றழித்து நாகையினைச் சுவைத்தாயோ?
கொழிதரங்கம் பாடி என்ன
இன்றிருக்கும் ஊரினையும் அலைக்கையால்
இழுப்பதற்கோ சென்றாய் அங்கே? 5

நெய்தலெனப் பெயர்சூட்டிப் இரங்கலென
நினக்குரிமைப் பொருளும் தந்த
செய்கையது நன்றுநன்று! அழித்தழித்தே
இரங்கியழச் செய்தாய்! அந்தச்
செய்கையினை மறந்துவிட்டோம் நீஎமக்குச்
செய்ந்நன்றி நினைத்த தாலே;
செய்வளர முகிலுக்கு நீர்கொடுக்கும்
சிறப்புனது நன்மை அன்றோ! 6

கடற்பரப்பில் அலைஎழும்ப நீர்பிளந்து
கப்பல்விரைந் தோடுங் காலை
அடக்குமுறை ஆங்கிலத்தார் அரசெ திர்த்த
சிதம்பரப்பேர் அண்ணல் தெற்குக்
கடற்பரப்பில் கலம்விட்ட நினைவெழுந்து
கண்ணெதிரே தோன்றும்; இன்னும்
விடக்காணோம் தமிழ்க்கலங்கள் நாட்டுணர்வு
விட்டனரே எனவும் தோன்றும் 7

உன்னிடத்தே முத்துண்டு பவழமுடன்
உணவாகும் மீனும் உண்டு
பொன்கொழிக்கும் கப்பல்களைப் பாழாக்கும்
பொல்லாத சுறவும் உண்டு;
மன்னிலத்தும் அப்படித்தான் மக்களுக்குள்
வாழ்வழிக்கும் திமிங்கி லங்கள்,
கன்மனத்துச் சுறவினங்கள், நல்லொளியைக்
காட்டுகிற முத்தும் உண்டு 8

உலகுக்கோர் பொதுவுடைமை நீயென்ற
உண்மையுணர்ந் திருந்தும் சில்லோர்
கலகத்தார் எனதுகடல் உனதுகடல்
காணென்று பூசல் செய்வார்;
விலகத்தான் கோடுண்டா! குறியுண்டா?
வீணாக மக்கள் யாரும்
உலகத்துப் பொருளெல்லாம் தமதென்றே
ஒற்றுமையை மாய்க்கின் றாரே! 9

கற்றுணர்ந்த சான்றோரின் உள்ளம்போல்
கடலேநீ ஆழம் கொண்ட
பெற்றியுணர்ந் தாழிஎன்றார்; யாதும்மூர்
பிறரெல்லாம் கேளிர் என்ற
பற்றுடைய தமிழினத்தார் பரந்தமனப்
பான்மையெனப் பரந்து நிற்கும்
ஒற்றுமையைக் கண்டன்றோ எம்முன்னோர்
உனைப்பரவை என்று சொன்னார் 10

*விளங்காத மொழிபேசும் என்மகவு
விளையாடும் பொழுது மண்ணில்
மழுங்காத சிறுவிரலால் கீறிவிடும்
வளைவுகள்போல் கரையில் நண்டு
ஒழுங்காக அமையாமல் ஓடியோடிக்
கோலமிடும்; ஆளைக் காணின்
இளங்காளை முன்வந்தால் நாணமுறும்
இளையவள்போல் மறையும் ஓடி 11

கடலுக்குள் வலைவீசி மீன்பிடிக்கக்
காதலனை வழிய னுப்பிக்
குடிலுக்குள் அவன்வரவை எதிர்நோக்கிக்
கொண்டிருக்கும் மங்கை யுள்ளம்
துடிதுடித்துக் குமுறுவதைப் போல்நீயும்
துடிக்கின்றாய்! குமுறு கின்றாய்!
கடனுக்கோ? அன்றியவள் துன்பத்தைக்
கண்டோநீ உண்மை சொல்வாய்! 12

நீலமணிக் கடற்கப்பால் கீழ்வானில்
நெடுங்கதிரோன் செந்நி றத்தைக்
கோலமுடன் பூசுவதைக் கண்டேன்நான்
குதித்தெழுந்து கடவுள் என்றேன்;
ஞாலமுளார் நாத்திகமாம் என்கின்றார்
நானதற்குச் செய்வ தென்ன?
வேலையிலார் சொல்லுக்குச் செவிசாய்த்தா
வேலைகளைச் செய்கின் றாய்நீ? 13

---

**பாடற் குறிப்பு:—** *இப்பாடல் சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## 8. மயிலே!

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

விண்ணுக்குப் பொலிவூட்டும் பன்னிறங்கள்
விளையாடும் தோகைக் கண்ணின்
எண்ணிக்கை எத்தனைபார்! அழகைத்தான்
என்னென்பேன்! ஒலிக்கும் மேகப்
பண்ணுக்குத் தவறாமல் அடிவைத்துப்
பரதத்தைச் செய்வாய்! என்றன்
கண்ணுக்கும் புண்பட்ட கருத்துக்கும்
களிப்பூட்டும் மயிலே வாழ்க! 1

மங்கையர்க்கு நின்சாயல் உண்டென்ன
மனமெனக்கோ ஒப்ப வில்லை;
இங்கிருக்கும் சாதியைப்போல் எண்ணற்ற
கண்ணுள்ள நீளத் தோகை
இங்கிதமாய் விரித்துநடஞ் செய்யுங்கால்
எழுப்புகிற குரலின் ஓசை
நங்கையரின் இன்குரலுக் கொப்பில்லை
நகைக்கின்றார் அதனைக் கேட்டு 2

புள்ளிமயில்! உன்னைக்கண் டாலறிவுப்
புலவனுக்குத் தோகை காட்டி
உள்ளமதில் கற்பனைகள் சேர்க்கின்றாய்!
ஓவியன்வைத் தெழுது கோலைத்
துள்ளிவிளை யாடச்செய் கின்றாய்நீ!
துடுக்குள்ள பெண்ணை நோக்கி
எள்ளிநகை செய்வதற்கோ நிமிர்கின்றாய்?
எழில்மயிலே மீண்டும் ஆடு! 3

## 9. இயற்கையின் எழுச்சி

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

நேரிசை ஆசிரியப்பா

இயற்கை யரசி உலாவர எண்ணி
எழுந்தனள் போலும் எனக்கரு தியதால்
விளக்குக் கம்பம், வீதியில் நின்ற
தந்திக் கம்பம் தலைவணங் கினவே;
இவற்றின் கம்பியால் எடுத்தன தோரணம்;
வீடுகள் தாமும் வீழ்ந்து வணங்கின;
உயர்பெரு மரங்கள் உச்சியை மட்டும்
அசைத்து நின்றன ஆர்ப்பொலி கேட்டு
நின்ற நிலையில் நெடுக வீழ்ந்தன;
புள்ளினம் தம்வாய் புதைத்து நின்றன;
ஓடுகள் மலரென உதிர்ந்தன எங்கும்;
குடிசைக ளிவற்றைக் கோமகள் காணல்
வேண்டா என்று விரும்பிய வான்மரம்
அடிவயிற் றகத்தில் அடக்கிக் கொண்டன;
சிற்சில குடிசைகள் சிதறி வானில்
வாண வேடிக்கை விளைத்தன; மக்கள்
அங்கு மிங்கும் அலைந்து திரிந்தனர்;
கதிரவன் மதியன் கரந்து நோக்கினர்;
ஊரெலாம் பேரொலி ஓங்கி உயர்ந்தது;
மூன்று நாள்கள் எங்கும் முழக்கம்;
உலாமுடித் தேகினள் ஊரெலாம் ஓய்ந்தது;
ஆயினும் வெவ்வே றார்ப்பொலி எழுந்தன;
மண்ணிற் புதைந்த மகவைத் தோண்டிய;
தாங்கொணாத் துயரால் தாயர்தம் கதறல்,
கைகால் இழந்தோர் கதறும் அழுகுரல்,
வீடுகள் இழந்தோர் விளைத்திடும் கூக்குரல்,
மாடுகள் ஆடுகள் மாண்டன என்றே
ஏழை மாந்தர் எழுப்பிய அலறல்,
சிதைந்த கோலங் காணச் செல்லும்
சிறுசிறு குழுவினர் செய்திடும் பேரொலி,
சிதைந்த குடில்களைச் செப்பஞ் செய்வோர்
எழுப்பொலி அனைத்தும் எழுந்து பரந்தன;
அண்டையில் நின்ற மரங்கள் அனைத்தும்
தம்சிறு குடிலைத் தகர்த்ததை எண்ணிச்
சீற்றங் கொண்டார் போலச் சிற்சிலர்
துண்டு துண்டாய்த் துணித்தனர் உறுப்பினை
முண்டமாய்க் கிடந்தன முழுமரம் அனைத்தும்;
பள்ளிகள் பற்பல பாழாய் நின்றன;
எங்கும் சிதைந்தும் அழிந்தும் இருந்தன;
இல்லம் இழந்த எளியோர் சிந்திய
கண்ணீர் மழைநீர் கலந்து பரவின;
இழப்பொலி இழப்பொலி எங்கும் ஒலித்தன;
அந்தோ அந்தோ அவலம்!
இயற்கை அரசியின் எழுச்சிப் பயனே!

**பாடற் குறிப்பு:—** 1955ஆம் ஆண்டில் தமிழகம் எங்கும் வீசிய பெரும் புயலால் நேர்ந்த விளைவுகளைக் கண்டு பாடப் பெற்றது.

## 10. முகிலிடை நிலா

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

பாம்பொன்று நினைவிழுங்கும் என்று சில்லோர்
பகர்ந்திடுவார் அதைநம்பார் அறிவில் நல்லோர்;
வேம்பன்னார் எமைவீழ்த்த இனைய சூழ்ச்சி
விளைத்தார்கள் தொலைத்தார்கள் தமிழர் ஆட்சி;
கூம்புவதேன் தாமரைகள் உன்னைக் கண்டு?
குடைந்துதேன் அருந்தமலர் சென்ற வண்டு
தேம்புவதைக் காணாயோ சிறையிற் பட்டு?
சென்றிடுவாய் வெளியில்விடச் சொல்லி விட்டு 1

ஆரியத்தால் ஒளியிழந்த தமிழர் போலே
அழகிழந்தாய் உனையடைந்த மேகத் தாலே;
நாரியரின் முகங்கண்டு நாணி உள்ளே
நண்ணினைநீ எனஎண்ணி நகைத்தாள் முல்லை;
''வேறினத்தார் நாடாள வீணன் அல்லேன்
வேலெடுத்துப் போர்தொடுப்பேன் வெற்றிகொள் வேன்
சீரழிப்பேன்'' எனக்கிளம்பும் வீரன் போலச்
சிரித்தெழுந்தாய் மேகத்தைப் பிளந்து மேலே. 2

---

**பாடற் குறிப்பு:—** பொன்னி இதழில் ''பாரதிதாசன் பரம்பரை'' என்ற தலைப்பில் வெளி வந்த பாடல்கள் பல. இரு பாடல்களே கிடைத்தன.

## 11. தேடிய எழில்

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

எழில்வாழும் இடந்தேடினேன் – நான்
இரவோடு பகலாக அலைந்தோடினேன்
—எழில்

முடிப்பு

மயில்போல நடமாடும்
மடமாதர் காலிலே
மயலோடும் கயல்போலும்
மடவார்கண் வேலிலே
—எழில்

முகிலாலே முகமூடி
நிலவோடும் வானிலே
குகைசேரும் புலியானைக்
குலம்வாழும் கானிலே
—எழில்

கருமேக வரைமீது
கனியாடு காவிலே
உருவாகி மணம்வீசி
ஒளிசேரும் பூவிலே
—எழில்

விரிதோகை மயிலாடி
விளையாடும் போதிலே
அரியேறு திமிரோடு
நடைபோடும் போதிலே
—எழில்

கவிபாடும் பணிசேரும்
கவிவாணர் நாவிலே
புவிவாழ உழுவார்தம்

புயமேவும் ஏரிலே

—எழில்

அருகேஎன் உடனாகி
அருள்வாழும் நெஞ்சிலே
உறவாடி எழில்வாழ்வ
துணராமல் எங்குமே

—எழில்

## 12. ஆடு மயிலே

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

ஆடுமயிலே நடம் ஆடுமயிலே
ஆடுங்கலைக் கழகு தேடுமயிலே

முடிப்பு

விண்ணகத்துக் கார்முகிலைக் கண்டு மகிழ்ந்தாய்
விஞ்சுமெழில் தோகைதனை மெல்ல விரித்தாய்
கண்ணிமைக்க நேரமின்றிக் கண்டு மகிழ்ந்தேன்
கற்பனையைத் தூண்டிவிட்டாய் ஆடு மயிலே

பண்ணமைக்கும் பாவலர்கள் பாடும் பொருளாய்ப்
பயில்வல்ல ஓவியர்கள் தேடும் பொருளாய்
வண்ணவகைக் கண்படைத்த தோகைமயிலே
வட்டமிட்டு வட்டமிட்டே ஆடு மயிலே

கெண்டைவிழி மாதர்களுன் அண்டை வருவார்
கெஞ்சியுன்றன் சாயல்பெறச் சண்டை இடுவார்
கொண்டைமயில் வென்றோமென்று கொண்டு திரிவார்
கோதையர் செருக்கடக்கி ஆடு மயிலே

கண்டவர்கள் நெஞ்சுருக ஆடி வருவாய்
கற்றவர்கள் மெச்சுதமிழ் பாடி மகிழ்வாய்
எண்டிசையும் எங்கள் புகழ்கூடி வரவே
எக்களிப்பு மிக்குவர ஆடு மயிலே

பாடும் இசைக்குருகி நெஞ்சு நெகிழ்ந்து
பாதமெடுத் தாடுகையில் வஞ்ச மனத்தார்
வேடர் பெருவலையை வீசி வருவார்
வீழாமல் கண்விழித்தே ஆடு மயிலே

நாட்டைக் கெடுக்கும்நரிக் கூட்டம் நிகர்வார்
நச்சுக் குணம்படைத்த நாகம் அனையார்
கேட்டுச் செயலனைத்தும் நீக்கி விடவே
கெக்கலித்துச் சுற்றிநடம் ஆடு மயிலே

## 13. காலைக் கதிரவன்

(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

காலையில் தோன்றும் கதிரவனை — தாமரை
கண்டு மலர்ந்தது பொய்கையிலே

—காலை

தொடுப்பு

சோலைமலர்களை வண்டினம் நீவிடத்
தூங்கிய மந்திகள் கிளைகளில் தாவிட

—காலை

முடிப்பு

பள்ளிச் சிறார்கள் மனந்தெளி வடைந்து
பயின்றிடும் ஒலியெழக் கன்றுபால் அருந்திடத்
துள்ளித் திரிந்திட யாவரும் மகிழ்ந்திட
துணையொடு தூங்குவார் மனம்மிக வருந்திட
—காலை

எழில்மிகு கோலம் வகைவகை வனைந்திட
எங்கணும் மங்கல ஒலிகள் முழங்கிட
விழிமலர் அலர்ந்திடப் புத்துணர் வோங்கிட
வினைஞர்கள் உழவர்கள் தந்தொழில் செய்திட
—காலை

## 14. மாலை நேரம்
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

மாலை நேரந் தோன்றும் வானமே
மனமகிழ் பலவகை நிறமுடன்
—மாலை

தொடுப்பு

சோலையில் பறவைகள் கூட்டில் உறைந்திட
வேலையில் ஆதவன் மெல்லவே மறைந்திட
—மாலை

முடிப்பு

ஓதிய பிள்ளைகள் ஒன்றி விளையாட
வீதியில் ஆவினம் கன்றுள்ளி ஓட
மாதர்கள் நற்றமிழ் இன்னிசை பாடக்
காதலர்ப் பிரிந்த கன்னியர் வாட
—மாலை

உள்ளங் கவர்ந்திடும் உன்எழில் கண்டேன்
கள்ளங் கவடற்ற அமைதியுங் கொண்டேன்
வெள்ளம்போல் உணர்வெழக் கவிதைகள் விண்டேன்
மெள்ள மெள்ள இன்ப உலகினிற் சென்றேன்
—மாலை

## 15. நானே அரசிருப்பேன்
(நூல்:—பாடுங் குயில்)

மருவிய முகிலாய்த் தவழ்ந்திடுவேன்
 மலைமேல் மழையாய்ப் பொழிந்திடுவேன்
அருவியின் உருவாய்த் திகழ்ந்திடுவேன்
 ஆறென உலகில் நுழைந்திடுவேன் 1

வயல்தனில் புனலாய்ப் பாய்ந்திடுவேன்
 வண்டலுந் துணையாத் தோய்ந்திடுவேன்
பயிரென விளைந்தே சாய்ந்திடுவேன்
 பசிதனைப் புவியில் காய்ந்திடுவேன் 2

உலகினில் எங்கணும் ஓடிடுவேன்
 ஒவ்வொரு மண்ணையும் நாடிடுவேன்
கலகல எனுமிசை பாடிடுவேன்
 கடலுள் முடிவிற் கூடிடுவேன் 3

கனிகளின் உருவில் தொங்கிடுவேன்
 கனியுள் சுவையாய்த் தங்கிடுவேன்

இனியநல் லிளநீர்த் தெங்கினிலே
    இன்பம் மிகவே பொங்கிடுவேன் 4

ஏரியுங் குளமும் நிறைந்திருப்பேன்
    எளிதே மணலுள் மறைந்திருப்பேன்
ஊரவர் தொடத்தொடச் சுரந்திருப்பேன்
    உலகஞ் செழித்திட வரங்கொடுப்பேன் 5

மழலையின் இதழில் துடிதுடிப்பேன்
    மகளிரின் விழியுள் குடியிருப்பேன்
அழகிய சோலையில் கொடிபிடிப்பேன்
    அவனியில் நானே அரசிருப்பேன் 6

## 16. யாரடியோ?

(நூல்:—பாடுங் குயில்)

கொள்ளைப் பனிபொழி மார்கழித் திங்களில்
    கோலமி டத்தெரு வாயிலிலே
அள்ளிப் புனல்தெளித் தென்மகள் புள்ளிகள்
    ஆயிரம் வைத்தனள் பாரடியோ!
வெள்ளை நிலாமகட் கன்னி உலாவரும்
    வீதியில் எத்தனை கோலமடி!
வெள்ளி எனும்பெயர் கொண்டிடும் புள்ளிகள்
    விந்தையில் வைத்தவள் யாரடியோ? 1

ஈகை மனத்தவ ளேஉனைப் போல்மகள்
    ஏந்தி நடம்புரிந் தாளடியோ!
[1]ஓகை மிகுத்திட ஆடல் விளைத்திடும்
    ஓவியம் எத்தனை பாரடியோ!
மேகம் முழங்கிடத் தாளம் இசைந்திட
    மென்மயில் கூத்திடல் காணடியோ!
தோகை விரித்தொரு மாமயில் ஆடிடச்
    சொல்லிக் கொடுத்தவர் யாரடியோ? 2

நாடொறுங் கற்றிடும் பாடலைப் பெற்றிடும்
    நம்மகள் பாடிடல் கேளடியோ!
வாடிடும் என்மனந் தேறிடச் செய்திடும்
    வல்லமை வாய்ந்திடும் யாழடியோ!
கூடிடும் மாமலர்ச் சோலையி லேஒரு
    கொம்பினில் தீங்குயில் கூவுதடி!
பாடிடும் மென்குரல் தேனடி! அவ்விசைப்
    பாடங் கொடுத்தவர் யாரடியோ? 3

பற்றிய ஆசையில் சிற்றில் இழைத்திடும்
    பாவையுடன் செல்வியைப் பாரடியோ!
சுற்றிடும் நீள்மதில் முற்றிய வீடுகள்
    சூழ்ந்துள காட்சியைக் காணடியோ!
தொற்றிய தென்னையில் பற்றி யசைந்திடும்
    தூக்கணங் கூடுகள் பாரடியோ!
கற்றவர் போலவை கட்டிட அத்திறன்
    கற்றுக் கொடுத்தவர் யாரடியோ? 4

---

**பாடற் குறிப்பு:—** 11.10.1973 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. ஓகை — மகிழ்ச்சி.

## 17. மலர் தந்த பாடம்

(நூல்:—பாடுங் குயில்)

அரும்பிச் சிரிக்குஞ் சிறுமலரே – நெஞ்சை
அள்ளிக் கவரும் எழிலுருவே
விரும்பிக் கிடக்கும் எனதுளமே – நின்பால்
வீசும் மணமும் நுகர்வுறவே 1

இதழை விரித்தே நகைபுரிவாய் – வண்டோ
ஏழிசை பாடச் சுவைதருவாய்
புதுமைப் பொலிவால் நலந்தருவாய் – மாதர்
போற்றிப் புகழும் நிலைபெறுவாய் 2

விரியும் இதழில் சிறுபனிகள் – காலை
வீழும் பொழுதில் பெறுமழகு
பரிதிக் கதிரால் மெருகுபெற – நின்னைப்
பார்த்துக் களிப்பேன் இருவிழியால் 3

உருவாய் வருங்கால் அரும்பென்பார் – நின்றன்
உடலோ பருத்தால் போதென்பார்
சிறிதே விரிந்தால் மலரென்பார் – கீழே
சிதறி விழுந்தால் [1]வீஎன்பார் 4

உலகில் பிறந்தாய் மணந்தந்தாய் – மாதர்
உள்ளம் மகிழத் துணைநின்றாய்
இலகும் எழிலைப் பிரிகின்றாய் – வாடி
எங்கோ தரையில் உதிர்கின்றாய் 5

'இருக்கும் பொழுதில் பிறர்மகிழ – உன்னால்
இயலும் வகையால் உதவிடுக'
குறிப்பு மொழியால் அறிவுரையை – என்பால்
கூறி முடித்தாய் நினதுயிரை 6

அழகும் மணமும் நிலையலவே – பாரில்
ஆடி யடங்கும் முறையுளதே
குழையும் மனத்தில் அருள்பெறுவேன் – மக்கள்
குலமே உயர உதவிடுவேன் 7

குளிரும் மலரே ஒருமொழியை – உன்பால்
கூற நினைத்தேன் செவிவழியே
தளரும் நிலைதான் வருபொழுதும் – மாந்தர்
தமக்கே கொடுப்பேன் எனதுயிரை 8

---

**பாடற் குறிப்பு:–** 4.10.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. வீ – வாடி விழும் மலர்.

## 18. அருகில் அவளிருந்தால்

**(நூல்:–பாடுங் குயில்)**

அவளும் தமிழும் அருகிலிருந்தால்
ஆயிரம் ஆயிரம் பாடல் வரும்
–அவளும்

குவளை மலரில் குளிர்விழி பெறுவாள்
குவியிதழ் முல்லையில் குறுநகை புரிவாள்
–அவளும்

தண்பனி மலைமேல் தவழும் முகிலால்
தனதுடல் எழிலை மூடிடும் [1]துகிலாள்
விண்படும் மலையில் வீழ்ந்திடும் அருவி
விரலிசை மீட்டும் யாழெனுங் கருவி
–அவளும்

காலையில் கீழ்த்திசைக் கடல்மிசை எழுமோர்
கதிர்தான் என்மனக் [2]கன்னியின் முகமாம்
மாலையில் மேற்றிசை மினுக்கிடும் வானே

மனங்கவர் எழில்கொளும் மங்கையின் மேனி
—அவளும்

தண்பனி நிலவில் தனிநடம் புரிவாள்
தளிரில் மலரில் பனியென உறைவாள்
கண்துயில் மருவும் பசும்புல் தரையாள்
களிகொள் மயில்போல் ஆறெனத் திரிவாள்
—அவளும்

மாலையில் நாணிச் சிவந்திட வருவாள்
மருளும் மாலையை மயங்கிடத் தருவாள்
சீலையென் றிரவினைத் தாங்கியே திரிவாள்
சிரித்திடச் சிரித்திட விந்தைகள் புரிவாள்
—அவளும்

செடிகொடி விரிக்கும் மலர்களிற் சிரிப்பாள்
சிதறிய மலர்களில் பஞ்சணை விரிப்பாள்
மிடிகெட உழைக்கும் தோள்களில் இருப்பாள்
மேதினி யாவும் மேம்படும் விருப்பாள்
—அவளும்

உழுபவன் கலப்பையின் முனைதனில் நடப்பாள்
உளிகொளும் சிற்பியின் விரல்களில் நடிப்பாள்
[3]இழைகொளும் பாவினில் அவிநயம் பிடிப்பாள்
எழுச்சிகொள் கவிஞனுக் குணர்ச்சியைக் கொடுப்பாள்
—அவளும்

---

**பாடற் குறிப்பு:—** 29.6.1979 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. துகிலாள் — ஆடையையுடையவள்.
2. கன்னி என்றது இயற்கையை. 3.இழை — நெய்யுந்தறி.

## 19. நல்ல உலகமடா!

**(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)**

கலிவெண்பா

விண்ணைத் தொடநிமிர்ந்த விந்தைப் பெருமலைஎன்
கண்ணிற் புகுந்து கருத்தில் இடம்பெறவே
வண்ண எழிலெல்லாம் வாரிப் பருகமனம்
எண்ணியதால் ஆங்கோர் எழில்முகிலா மாறிமிக
ஓங்கும் மலைமுகட்டின் உச்சிப் பெருவெளியில்
தேங்கித் தவழ்ந்து திரிந்துவிளை யாடிவந்தேன்;
பூத்துக் குலுங்கும் பொலிவுடைய மாஞ்சோலை
பார்த்துக் களித்தங்குப் பாடுங் குயிலானேன்
கேளென்று வந்த கிளைக்குயிலைக் கூடிநின்று
நாளெல்லாம் நல்ல தமிழ்பாடிக் கொண்டிருந்தேன்;
முற்றி முதிர்கனிகள் மொய்த்திருக்கக் கண்டதனால்
பற்றி அவையுண்ணப் பாய்ந்துவரும் சிற்றணிலா
மாறிக் கிளைதோறும் மாங்கனிகள் துய்ப்பதற்
கேறிக் குதித்தங்கே எக்களித்து நான்திரிந்தேன்;
நாற்றைச் செழிப்பாக்கி நாட்டைச் சிறப்பாக்க
ஆற்றிற் சலசலவென் றார்த்துப் புனலோடக்
கண்டேன் குதித்தேன் கயலாகிப் பாய்ந்தின்பம்
கொண்டேன் அதனுட் குளித்தெழுந்து துள்ளிக்
குதித்து நெளிந்தோடிக் கொத்தடிமை யின்றி,
எதிர்த்துவரும் நீருள் எழிலாக நீந்திவந்தேன்;
ஆறும் நெடிதோடி ஆர்த்தெழும்பும் நீள்கடலுட்
சேரும் பொழுதத்துச் சீறும் அலையானேன்
பொங்கிக் கரைமோதிப் போய்த்திரும்பி ஆடுகையில்
அங்கே முகில்வரலும் ஆசைப் பெருக்கதனால்
மீண்டும் முகிலாகி மேலே தவழ்ந்தேறி
யாண்டும் திரிந்துமனம் ஆரக் குளிர்ந்ததனால்
பெய்யும் மழையானேன் பேசும் மனிதரவர்
செய்யுங் கொடுமைகளுஞ் சேராப் பிளவுகளும்
வஞ்சம் கொலைகளவு வாட்டும் வறுமைஎன

அஞ்சும் படிகண்டேன் ஐயவோ என்றரற்றி
நல்ல உலகமடா! நாகரிக மாந்தரெனச்
சொல்ல மனங்கூசும்; சூது மிகவுடையார்;
இன்ப வுலகத்தை ஈங்கிருந்து காண்பரிது
துன்ப வுலகமிது துன்பம் எனநெஞ்சம்
ஆற்றாமல் நல்லுலக ஆசையினால் மீண்டுமொரு
காற்றோடு போனேன் கரைந்து.

## 20. நீரின் பெருமை

(நூல்:—தமிழ் முழக்கம்)

கலிவெண்பா

பூதங்கள் ஐந்தாலும் பூத்ததுதான் இவ்வுலகம்
வேதங்கள் மற்றுள்ள விஞ்ஞான நூல்களெலாம்
ஓதுகின்ற உண்மையிதே; ஓதுமோர் ஐந்தனுள்
தீதகன்ற நானும் திகழ்கின்றேன்; என்னைத்தான்
நீரென்று பேர்குறிப்பர் நீணிலத்தார்; பாருக்கு
வேரென்று சொல்லி வியந்துரைக்கத் தக்கவன்யான்;
நீரின் றமையா துலகமெனக் கூறியபின்
வேறென்ன சான்று விளம்புதற் கீங்குளது?
பற்பலவாம் நற்பண்பு பாரில் எனைப்போலக்
கற்றவரைக் கண்டதிலை; காணுங்கள் என்பண்பை;
காவிற் செழித்தஒரு கான்முல்லை கொம்பின்றித்
தாவிப் படர்தற்குத் தள்ளாடும் வேளைதனில்
காரோட்டும் கையுடையான் கண்டுமனம் நைந்துருகித்
தேர்காட்டிச் சென்றானோர் தென்னாட்டான் வேள்பாரி;
கூடிவருங் கார்முகில்கள் கொட்டும் மழைநனைக்க
ஆடிவரும் மாமயிலுக் காடைகொடுத் தான்பேகன்;
நாட்டுக் குரியவன்தான் காட்டுக்குச் சென்றாலும்
பாட்டுக் குருகிப் பரிசிலெனத் தன்தலையை
ஈந்தான் ஒருகுமணன் ஈகைக்கோர் பேரரசன்;
வேந்தன் அதியன் விறலிக்கு நெல்லிதந்தான்;
இவ்வனைய வண்மையினர் ஈரமுள்ள நெஞ்சத்தார்;
அவ்வனைய ஈரந்தான் ஆருக்குச் சொந்தமென்பீர்?
எற்கென்று வாய்த்த இயல்பன்றோ? தண்ணளியாம்
சொற்களித்த தண்மை எனக்குரிய சொத்தன்றோ?
ஊருக்கும் பாருக்கும் ஒத்துழைப்பேன்; சீறிவரும்
போருக்கு நானெழுந்தால் போடும் தடையில்லை!
கற்பனைஎன் றெண்ணேல் கடவுள் எனத்தகுவேன்;
தற்பெருமை யன்றிதற்குச் சான்று பகர்கின்றேன்;
என்னருளை வேண்டாதார் இவ்வுலகில் யாருள்ளார்?
சொன்ன இருதிணையின் சோர்வுதரும் வேட்கைதனை
நீக்கி மறைத்தருளும் நீர்மை உடையவன்நான்;
காக்குமிக் காரணத்தால் காதல்மீக் கூரஎனை
ஆறென் றழைத்திடுவர், ஏரிகுளம் என்றிசைப்பர்,
ஊறுங் கிணறென்பர், ஓங்கும் அருவிஎன்பர்,
கொட்டும் மழைஎன்றுங் கோலச் சுனைஎன்றும்
சொட்டும் பனிஎன்றும் சூழும் புனலென்றும்
பாயுமொரு வெள்ளமெனப் பற்பலவாம் தோற்றத்தில்
ஆயிரம்பேர் சொல்லி அழைப்பார்கள்; நீக்கமற
எங்கும் நிறைந்திருப்பேன், இல்லா இடமில்லை;
பொங்கும் மகிழ்ச்சியினால் பூசிப்பார் முன்னிற்பேன்,
விண்ணில் இருப்பேன், விளையாடிக் கூத்திடுவேன்,
மண்ணில் இருப்பேன், மலைமேல் குடியிருப்பேன்,
கட்புலனா காமல் கரந்திருப்பேன், என்னடியைத்
[1]தொட்டகழும் நல்ல [2]தொழும்பர்க் கிலக்காவேன்;
பேருருவங் கொண்டு பிறங்கித் திகழ்ந்தாலும்
சீறுருவம் பெற்றுச் சிலகால் வருவதுண்டு;
காட்சி தருமுருவம் காணா அருவுருவம்
மாட்சியுறப் பெற்றிருப்பேன், ஆவியாய் வானெழுந்து
காற்றிற் கலந்திருப்பேன், கார்முகிலா மாறியருள்

ஊற்றிப் பொழிந்துலகோர் உள்ளங் குளிர்விப்பேன்;
‘தூணில் இருப்பான் துரும்பிலும் நின்றிருப்பான்
காணும் பொருளில் கடவுள் கலந்திருப்பான்’
என்றுரைப்பர்; ஆய்ந்துணரின் என்னிலையும் அப்படியே;
நன்றினிக்குந் தெங்கின்காய் நான்புகுந்து வாழ்ந்திருப்பேன்;
மாங்கனியில் செங்கரும்பில் மற்றுள்ள தீங்கனியில்
தேங்குசுவைச் சாறாகச் சேர்ந்திருப்பேன்; ஆய்ச்சியர்தம்
மோருக்குள் பாலுக்குள் மூழ்கிக் கலந்திருப்பேன்;
பாருக்குள் யாரறியார்? பற்றுடையோர் தாம்விழைவர்;
செப்புத் தகட்டினால் செய்தபெரும் பானைகளும்
துப்புரவு செய்யாத தோண்டிகளும் பித்தளையின்
பாண்டமுடன் மட்குடமும் பாழுற்ற வாளிகளும்
வேண்டிக் குழாயடியில் வெய்யிலென்றும் பாராமல்
மாதவங்கள் செய்தங்கு மண்டிக் கிடப்பதெலாம்
பூதலத்தென் தோற்றப் பொலிவைக் கருதியன்றோ?
என்சமயம் நின்சமயம் இஃதே முதன்மையென
வன்சொல் லுரைத்து வழக்கிடுவார் போல்நின்
றெனதெனது முன்பானை என்றுவழக் கிட்டுத்
தனதுகுடம் தூக்கித் தடுமாறி ஓடிவரும்
பெண்டிர் குழல்பற்றிப் பேசா தனபேசிச்
சண்டை யிடுவதெலாம் தண்ணீராம் என்பொருட்டே;
ஆக்குந் தொழிலுடையேன் ஆகும் பொருளனைத்தும்
காக்கும் வினையுடையேன் காத்த அவைமுழுதும்
நீக்குந் திறலுடையேன் நீங்கா விளையாட்டிற்
போக்கும் பொழுதில் புரிகின்றேன் முத்தொழிலும்;
முந்நீர்மை செய்திங்கு முப்பொழுதும் வாழ்கின்ற
என்னீர்மை சொன்னேன் இறைவனெனில் ஒவ்வாதோ?
இத்துணைதான் என்பெருமை என்றெண்ணிப் போகாதீர்;
அத்தனையும் சொல்லில் அடங்கா தடங்காது;
‘தாயைப் பிழைத்தாலும் தண்ணீர்க் கொருகுறையும்
தோயப் பிழைக்காதீர்’ தொன்மை மொழியிஃதாம்;
என்றுரைத்த போதும் இருநிலத்து மாந்தரெலாம்
நன்றியின்றிச் செய்துவரும் நாலா யிரம்பிழையும்
ஏற்றுப் பொறுக்குமெனை எள்ளி நிலந்தன்னைச்
சாற்றும் பொறுமைக்குச் சான்றோர் உவமிப்பர்!
செல்வரென அல்லரெனச் சிந்தித்துப் பார்ப்பதிலை
அல்லரென நல்லரென ஆய்தல் எனக்கில்லை
நெல்லுக்கும் புல்லுக்கும் நேர்நின் றுதவிடுவேன்
சொல்லுக்குச் சொல்லவிலை; தோழர் அனைவருமே
சாதி சமயங்கள் சண்டையிடுங் கட்சிஎன
ஓதி வருவார்கள் ஒன்றையும் நான்பாரேன்;
எல்லாரும் நல்லரென்பேன் யாவருங் கேளிரென்பேன்
பொல்லார் எனவுரையேன் பூணும் பகையறியேன்;
ஆனாலும் ஓர்பகைவன் அந்தோ இருக்கின்றான்;
மேனாள்தொட் டென்னிடத்து மேவாப் பகைகொண்டான்;
தீண்டார் ஒருவருமே [3]தீயன் அவனென்றே;
காண்பார் ஒருவரிலர் காந்தும் குணத்தனென;
சின்னவன் என்றென்னைச் சீறிச் சிவந்தெழுவான்
அன்னவன் முன்னேநான் ஆர்த்துப் படர்ந்தெழுவேன்;
பாவம் அவனுடலம் பாழாய்க் கருகிவிடும்;
நாவை அடக்காதார் நைந்தழிவர் ஈதுண்மை;
காதலால் ஒன்றுபடுங் காளையரும் கன்னியரும்
பேதமிலா நெஞ்சாற் பிணைவதுபோல், உண்மையுளங்
கொண்டிலங்கும் நட்பினர் கூறு படலின்றிக்
கண்டுணர்ந்து நெஞ்சம் கலந்தொன்றாய்க் கூடுதல்போல்
எப்புலத்துச் சார்ந்தாலும் அப்புலத்து வண்ணம்பெற்
றிப்புவியில் வாழ்வேன் எனக்கென வண்ணமிலேன்;
பள்ளிச் சிறுவர்க்குப் பாரில் எனைப்போல
உள்ளம் மகிழ்விப்பார் உள்ளனரோ? இல்லைஎன்பேன்;
கூவிப் பலகூறிக் கொட்டமடித் தென்மடியில்
தாவிக் குதித்துமிகு தாண்டவங்கள் ஆடிடுவர்;
தோணிபல செய்து சுதந்திரக் கப்பலினால்
வாணிகம் செய்வதுபோல் வட்டமிட்டுத் தாம்மகிழ்வர்;
பேசும்பொற் சித்திரமாம் பிள்ளை விழிக்கடையில்

வீசுமொளி முத்தாய் விளங்கித் ததும்பிநின்று
காவியம் வல்லார்க்கும் ஓவியம் வல்லார்க்கும்
பூவியக்குங் கற்பனைகள் பூத்துவரச் செய்திடுவேன்;
ஊடிவரும் மெல்லியலார் ஒண்மலர்க் கன்னத்தில்
ஓடிவரும் நீராவேன்; ஆடவர் கண்டுவிடின்
ஐம்புலனும் ஒன்றாகி, அந்தோ நடுநடுங்கி,
வெம்பியுளம் வாட்டமுற, வீரம் நிலைகலங்கப்
பொற்றொடியார் நெஞ்சங்கள் பூரித்தே எக்களிக்க
வெற்றி பெறவே விளையாட் டயர்ந்திடுவேன்;
சால்புணர்ந்தோர் கூறும் தகவுரைகள் கேளாது
கோல்பிறழ்ந்தார் ஆட்சியில் கூழுக்கும் வக்கில்லார்
கூன்விழுந்த மேனி, குழிவிழுந்த கன்னங்கள்,
ஏன் பிறந்தோம் என்றேங்கும் நெஞ்சம், இவையுடையார்
கண்களிலே தேங்கிக் கசிந்து துளியாகி
மண்ணிற் கொடுங்கோன்மை மாய்க்கும் படையாவேன்;
சோர்வின்றிப் பாடுபட்டும் சோறின்றிப் பாடுபட
ஏர்வென்றி கொண்டமகன் ஏங்கித் தவித்திருக்கும்
மண்குடிலுக் குள்ளே மழைவடிவில் நான்புகுவேன்;
புண்படுமா றந்தமகன் பொன்றும் நிலைகண்டு
மேற்கூரை ஏறிநான் மெல்ல அழுதிருப்பேன்
காற்கூரை எல்லாம் கசிந்துகண் ணீர்வடிப்பேன்;
வண்ணமலர்க் காநுழைவேன்; வாய்திறந்த கிண்ணமென
எண்ணும் படிவிரிந் தேந்தியுள தாமரையைக்
கண்டு மனங்குளிர்வேன்; கண்ணுக் கழகுதரும்
வண்டு தமிழ்பாடும் வண்ண மலர்ச்செடிகள்,
பூத்துக் குலுங்குமெழிற் பூங்கொடிகள் அத்தனையும்
பார்த்துச் சிரிப்பேன்; படர்ந்து வருமகிழ்ச்சி
இன்பக்கண் ணீராய் இலைநுனியில் பூவிதழில்
மென்பனித் துளிபோல வீற்றுக் கொலுவிருப்பேன்;
பாருலகம் தானியங்கப் பண்ணுதலால் என்பேரை
ஆரமிழ்தம் என்றும் அழைத்திடுவர்; இவ்வுலகில்
உண்பொருளை உண்டாக்கி உண்பொருளும் நானாவேன்;
என்பெருமை இம்மட்டோ? ஏர்முனைநாள் என்னும்நாள்
நானில்லை என்றால் நடந்திடுமோ? ஆழ்கடற்கும்
கானிலுள புல்லுக்கும் கட்டாயம் என்கருணை
வேண்டும் எனவுணர்ந்தே வேதப் பெரும்புலவன்
ஆண்டவன்பேர் சொல்லி அடுத்தபடி என்சிறப்பை
ஓதி மகிழ்ந்தனன்; ஓயாமல் ஆடிவரும்
பாதிமதி சூடும் பரமன் சடைமுடிமேல்
என்னைஏன் வைத்தான்? எனதருமை கண்டன்றோ!
முன்னைத் தமிழ்ச்சுவையில் மூழ்கித் திளைத்தவன்யான்
ஏறும் சுவைப்பாட்டின் ஏடுகள் நான்சுவைத்தேன்
கூறுமென் சொல்லில் குறையில்லை பொய்யில்லை;
நான்சுவைத்து விட்டெறிந்த நாலடியார் ஏட்டைத்தான்
தேன்சுவைபோல் நீங்கள் தெரிந்தெடுத்துப் பாடுகின்றீர்;
மூழ்கி வருவோர்க்கு முத்தளிப்பேன், சிற்சிலகால்
ஆழ்கடலில் செம்பவழ ஆரம் அளித்துவப்பேன்;
ஈந்துவக்கும் என்னீர்மை எல்லாரும் நன்குணர்ந்தும்
போந்தொருவர் கஞ்சனெனப் பொய்யில் எனையிகழ்ந்தார்;
என்பால், உவர்ப்புண்டாம் யார்க்கும் உதவேனாம்
வன்பால் இவருரைத்த வாய்மொழியை நம்பாதீர்;
நாச்சுவையோ டுண்பது நான்நல்கும் உப்பன்றோ?
பேச்செதற்கு – உப்பிட்ட பேரை இகழ்வதற்கோ?
மூவா திருக்க முடியா துயிரிருக்கச்
சாவா மருந்தளித்தேன் சார்ந்துவரும் வானவர்க்கு;
பாலுக்கும் வெண்ணெய்க்கும் பானை திருடிவரும்
மாலுக்கு மால்தந்த மாமகளைத் தந்ததன்பின்
பாலுங் குடியென்றேன் பாலே குடிகொண்டான்;
நாலுந் தெரிந்தவன்தான் நாகரிகம் தேர்ந்தவன்தான்
பெண்ணெடுதத வீட்டில் பிரியா திருந்துவிட்டான்
புண்படுத்தும் ஓர்சொல் புகன்றறியேன் இன்றுவரை;
பிச்சைஎடுத் தெந்நாளும் பித்தன்போல் கூத்தாட்டம்
இச்சையுடன் ஆடிவரும் இவ்வாழ்வும் வாழ்வாமோ?
என்று வெறுத்தான்போல் ஆலம் எடுத்துண்டான்

அன்று துடித்தே அமுதம் பொழிநிலவைக்
கொள்ளென் றவற்களித்தேன்; கூறுமிவ் வண்மையால்
வள்ளலென் றோத வகையறியார் என்னைஒரு 180
கஞ்சனென்றால் சீற்றம் கடுகிவரும்; ஆனாலும்
நெஞ்சம் வெறுக்கவிலை நீண்ட பொறுமையினேன்;
தண்ணளியால் பார்காக்குந் தக்க பொறுப்புடையேன்
விண்வெளியில் செல்வேன் விரைந்து. 184

---

**பாடற் குறிப்பு:–** மதுரை தியாகராசர் கல்லூரிக் கவியரங்கில் பாடியது – 22.2.1966.

**அருஞ்சொற் பொருள்:–** 1. தொட்டகழ்தல் – தோண்டுதல். 2. தொழும்பர் – அடியவர். 3. தீயன் – நெருப்பு.

## 21. பறம்புமலை

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

எண்சீர் விருத்தம்

பாடிவருஞ் சுரும்பினங்கள் களிக்கும் வண்ணம்
    பைந்தேனைச் சுரந்தூட்டும் குவளைப் பூக்கள்;
ஊடிவரும் மங்கையர்தம் விழிக ளென்ன
    ஒளிமின்னிப் பிறழ்ந்துபிறழ்ந் தலையும் மீன்கள்;
ஓடிவருந் தென்றலிலே புலர வைத்த
    ஒள்ளியமெல் லாடையென அலைகள் செல்லும்;
ஆடியவர் மனங்குளிர நலமே கூட்டும்
    அரியநறுந் தண்புனல்சேர் சுனைகள் உண்டு. 1

வான்பொய்த்த காலத்தும் சுனையின் ஈட்டம்
    வற்றாத புனல்சுரந்து வளமை காட்டும்;
மான்மொய்த்துத் திரிகின்ற சாரல் எல்லாம்
    வளவியவேய் நெல்விளைந்து செழுமை காட்டும்;
தேன்கைத்த தென்னநறுஞ் சுளைகள் நல்குந்
    தீம்பலவின் பழம்முதிர்ந்து கனிவு காட்டும்;
மீன்மொய்க்குஞ் சுனைகளெலாம் [1]இறாலு டைந்து
    மேலிருந்து தேன்சொரிய இனிமை காட்டும். 2

அகழ்வார்க்கு பசிகளையக் கிழங்கு நல்கி
    அங்கங்கே கொடிவள்ளி படர்ந்தி ருக்கும்;
முகில்பார்க்கும் பொழுதெல்லாம் மயிலின் கூட்டம்
    முழுமகிழ்வால் தோகைவிரித் தாடி நிற்கும்;
பகல்பார்க்க இயலாமல் அடர்ந்த சோலைப்
    பசுங்கிளிகள் தமிழ்பயிலும்; குருவிக் கூட்டம்
மிகவார்க்கும்; மரந்தோறுந் தாவித் தாவி
    [2]மேவனதாம் செய்தொழுகும் மந்திக் கூட்டம். 3

வளம்பலவும் நிறைந்திருக்கும்; வருவோர்க் கெல்லாம்
    வறுமையினைத் தொலைத்திருக்கும்; பகைமை பூண்டு
களம்புகுதும் வேந்தர்தமக் கரிதாய் நிற்கும்,
    கவிஞர்க்கும் விறலியர்க்கும் எளிதாய்த் தோன்றும்;
உளங்கவரும் பாவல்ல கபிலன் போன்ற
    ஒப்பரிய புலவர்தமைக் கொண்டிருக்கும்;
துளங்கரிய பறம்புமலை, பாரி வாழ்ந்த
    தொன்னாளில் புகழ்மணக்க ஓங்கி நிற்கும். 4

பல்வளமும் நிறைந்திருந்து நலமே செய்த
    பறம்புதனைக் கொடுங்குன்றம் என்ற தேனோ?
சொல்வளமும் பொருள்வளமும் நிறைந்த பாடல்
    சொலும்புலவர் பலர்வளைத்து நின்ற தாலோ?
மல்வளமும் வில்வளமும் கொண்ட வேந்தர்
    மனம்புழுங்கிப் படைவளைத்து நின்ற தாலோ?
கொல்பகையால் அணுகவொணாக் கடுமை கண்டோ

கொடுங்குன்றம் என்றதனை அழைத்தார் முன்னோர். 5

பாரிக்கே உரியதெனும் பறம்பு வெற்பைப்
பாடுங்காற் கபிலனெனும் உணர்வு, நெஞ்சில்
பூரித்தே நின்றிருக்கக் காணு கின்றேன்;
புலமையினாற் பாடுவதைக் கேட்டு வந்து
வாரித்தான் ஈவதற்குப் பாரி யில்லை;
வள்ளலவன் இன்றிருப்பின் நாங்கள் இன்ப
வாரிக்குள் திளைத்திருப்போம் வறுமை என்னும்
வன்பகையைத் தொலைத்திருப்போம் வாழ்வுங் காண்போம். 6

வாடுகின்ற முல்லைக்கு தேர்கொ டுத்த
வள்ளன்மைக் குணமுடையோன், வாழ்வு வேண்டிப்
பாடுகின்ற எம்மவரைக் காவா திங்கே
பார்த்திருத்தல் செய்வானோ? வானில் ஒன்றாய்க்
கூடுகின்ற முகிலுக்கும் வண்மை சொல்லிக்
கொடுத்திருந்த பாரியின்றன் புகழை நெஞ்சாற்
பாடுகின்ற பாடலுக்குப் பொருள்சி றக்கும்
பாவலர்தம் வாழ்வுக்கும் வழிபி றக்கும். 7

பாவலர்க்கும் மற்றவர்க்கும் நெஞ்சு வந்து
பாரிவள்ளல் தனக்குரிய முந்நூ றூரும்
நாவலர்கள் புகழ்ந்துரைக்கக் கொடுத்து யர்ந்தான்
நல்லவன்பேர் வாழியவே! தமிழ ணங்கின்
சேவடிக்கே தொண்டுசெயும் அடிகள் என்னைச்
சீராட்டிப் பொன்னாடை சூட்டி வாழ்த்திப்
பாவுலகக் கவியரசென் றொருபேர் தந்தார்
பரிவுளத்தை வணங்குகின்றேன் வாழ்க நன்றே. 8

---

**பாடற் குறிப்பு:–** பறம்புமலைப் பாரிவிழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், '**கவியரசு**' என்ற விருது வழங்கப் பாடியது – 30.4.66.

**அருஞ்சொற் பொருள்–** 1. இறால்–தேன்கூடு. 2.மேவன–ரும்பியன.

## 22. விண் குடும்பம்
**(நூல்:–தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

உப்புமுதல் எல்லா உணவுப் பொருள்விலைகள்
செப்பரிய ஏற்றத்தாற் செய்வ தறியாமல்
மண்ணிற் குடும்பம் மதிமயங்கி நிற்குங்கால்
விண்ணிற் குடும்பம் விரும்பிப் படைப்பதற்கு
முன்வந்தார் இவ்வரங்கில் முத்தமிழில் வல்லவர்தாம்;
என்சொல்லி வாழ்த்துவேன் இந்தத் துணிவுளத்தை!
பேராசைக் காரர்களின் பேயாட்டப் போர்முகில்கள்
தீராமற் சூழ்ந்து திகைக்கும் படியாக
மின்வெட்டும் போழ்தத்து மேவாச் செயல்செய்து,
கண்கட்டு வித்தையெனக் கள்ளத் தனம்புரிந்து,
பண்டங்கள் யாவும் பதுக்கி மறைக்கின்ற
முண்டங்கள், தாங்க முடியா விலைச்சுமையை
நந்தலையில் ஏற்றுகின்றார்; நாடோறும் ஏற்றுவதால்
வெந்துழன்று நொந்துமனம் வில்லாய் வளைகின்றோம்;
வில்லாய் வளைந்தவர் வீறுற் றெழுவாரேல்
சொல்லால் அதன்விளைவைச் சொல்ல முடிந்திடுமோ?
தாழ்ந்து நிமிர்கின்ற வில்லின் நுனிபட்டுப்
போழ்ந்துமுகம் செங்குருதி பொங்கி வழியாதோ?
பற்றாக் குறையினைப் பாவியிவர் காசுபணப்
பற்றால் விளைக்கின்றார்; பாரகத்தில் பஞ்சமெனும்
மூடுபனி சூழ முனைகின்றார் இக்கொடியர்;
கேடுதருங் கொள்ளையரைக் கேட்பதற்கோர் ஆளில்லை;

ஏனில்லை**?** செங்கதிரோன் இங்கே எழுவதற்கு
நானுண் டெனச்சொல்லி நல்ல விடிவெள்ளி
தோன்றிவரக் காண்கின்றோம்; துய்ய கதிரோனும்
வான்றிகழ வந்துவிடின் வாட்டி வதைக்குமிந்த
மூடுபனி சேர்ந்துருகி ஓடுபனி யாகாதோ**?**
நாடுநலம் பெற்றிலங்கும் நாளிங்கு வாராதோ**?**
வந்துவிடும்; வந்துவிடின் வாழ்விற் படுகின்ற
வெந்துயரம் அத்தனையும் வீழ்ந்துநிலா வாகுமன்றே;
மண்ணிற் குடும்பங்கள் மாண்புற்று முன்னேற
எண்ணுகதிர் வாழ்த்தி இனிக்காண்போம் விண்குடும்பம்;
நாட்டிற் குடும்பமெனில் நற்றலைவன் வேண்டுமன்றோ**?**
காட்டுமிவ் விண்குடும்பங் காக்குந் தலைவன்யார்**?**
வாழுங் கதிரவன்றான் வானிற் றலைமகனாம்;
ஏழு கிழமையென எண்ணும் பொழுதில்நாம்
முன்னையிடந் தந்து மொழிவது ஞாயிறெனும்
முன்னவனை யன்றோ**?** முதன்மை அவற்களித்த
காரணத்தால், விண்குடும்பங் காக்குந் தலைமையினால்
தாரணிந்த நல்ல தலைமகனாக் கொண்டிடுவோம்;
காக்குந் தலைவன் கதிரோன் எனப்படுமேல்
ஆக்குந் தலைமகள்யார்**?** அந்தத் திருமடந்தை
தண்மைக்கும் மென்மைக்கும் தங்கும் இடமாவாள்
பெண்மைக்கோர் காட்டாகப் பேசும் இயல்புடையாள்,
நாணத்தாற் கார்முகிலாம் நற்றுகிலைப் போர்த்திவரும்
வானத்தாள், தேனொத்தாள், வட்ட ஒளிமுகத்தாள்;
இத்தனையுங் கொண்டாளை ஏத்தி நிலவணங்கென்
றித்தரையோர் போற்றி இசைத்து மகிழ்வார்கள்;
வானமெனும் பந்தரிட்டு, வாருமழைத் தாரைகளை
ஈனுமொளித் தோரணமா ஏற்றியங்குத் தொங்கவிட்டு,
மின்னலெனும் நல்ல விளக்கேற்றி, வானத்தே
துன்னுமுகிற் கூட்டந் துகிலாக மேல்விரித்து,
ஆர்த்துவரும் மத்தளம்போல் அங்கே இடிமுழங்கச்,
சேர்க்கும் எழுவண்ணஞ் செய்யுமொரு வானவில்லை
வண்ணமலர் கொண்ட மணமிக்க மாலையெனக்
கண்ணழகன் சேயோன் கதிர்க்கையால் கொண்டுவந்து,
மீன்களெனுஞ் சுற்றம் மிடைந்தங்குச் சூழ்ந்திருக்கத்,
தேன்கலந்த சொல்லாளைத் திங்களெனும் நல்லாளை
வானவரும் [1]மீனவரும் வாய்மலர்ந்து வாழ்த்தெடுப்ப,
வானவன் சூட்டிஒரு வாழ்க்கைத் துணைபெற்றான்;
தீதறியா அந்தத் திருமதிதான் ஓரிரவில்
காதலினாற் கொண்ட களியாட்டில் நாணிநிற்கச்
செங்கதிரோன் மெய்தொட்டான்; சற்றே சினந்தவளாய்
அங்கே கருமுகிலாம் ஆடை எடுத்துமுகம்
மூடி மறைத்தருகில் ஊடிப் புலந்துநின்றாள்;
ஓடித் துகில்பற்றி ஒண்முகத்தில் வாய்புதைத்தான்;
வாய்மலர்ந்து தான்நகைத்தாள்; வானப் பெருவெளியில்
[2]பாய்மலர்ந்து மின்னலெனப் பற்றிப் படர்ந்ததுகாண்;
நெற்றியிற் பொட்டு நெடுங்கறை ஆகிவிடப்
பற்றிய கையைப் பறித்துக்கொண் டோடிவிட்டாள்;
பின்பற்றி ஓடியவன் பேதைதுகில் தொட்டிழுக்க
முன்பற்று மேகலையின் முத்துகள் அத்தனையும்
கொட்டிச் சிதறிக் குளிர்வானின் மேற்கிடந்து
முற்றும் [3]உடுக்கணமாய் அங்கே முகிழ்த்தனவோ**?**
கட்டுப்பா டில்லாத காலத்தே இவ்விருவர்
கட்டுப்பட் டில்லறங் கண்டமையால் தம்வாழ்வில்
எண்ணில்லாப் பிள்ளைகளை ஈன்றனரோ**?** அம்மக்கள்
விண்ணிற் றிரிந்து விளையாடுங் காட்சியைத்தான்
மண்ணகத்து மாந்தர் உடுவென்று மாற்றினரோ**?**
கண்பட்டு விட்டதென்பார் காதுக்குட் சொல்கின்றேன்;
எத்துணைதான் இன்பம் இழைந்திழைந்து வாழ்ந்தாலும்
ஒத்தமனங் கொண்டிங் குயர்வுடனே வாழ்ந்தாலும்
ஒன்றிரண்டு பூசல் உறுவ தியல்பாகும்;
கன்றிமனங் காய்ந்து கழறுவதும் அவ்வியல்பே;
வாழுங் குடும்ப வழக்குக்கு வானத்துச்

சூழும் குடும்பமும் சொல்லுங்கால் தப்பாது;
வானக் குடும்பத்தில் வாய்த்ததொரு பூசலினால்
தானந்தக் கூக்குரலோ? தையல் பெருங்குரலோ?
செங்கதிரோன் றன்குரலோ? செவ்விதிற் கேட்கவிலை;
பொங்கும் இடியென்று பூசி மெழுகுகின்றார்;
வீட்டில் நடப்பதெலாம் வேற்றார் தெரியாமல்
பூட்டி மறைப்பதுதான் போற்றுங் குடும்பமென்பர்;
வாழ்ந்து வருநாளில் வான்மகள்தன் மெய்யொளியிற்
றாழ்ந்து மெலிந்து தளர்ந்து நடைபயின்றாள்;
கண்பட்டுப் போகக் கணக்கில் மகப்பெற்றாள்
புண்பட்டாள் துன்புற்றாள் பொன்மேனி வாடிவர
நோயிற் பிணிப்புண்டாள், நுண்ணிடைபோல் தேய்ந்தழகுச்
சாயல் இழந்திழந்து சாய்ந்தே மறைந்துவிட்டாள்;
காதற் கணவன் கதிரோன் மனமுடைந்து,
சாதல் உறுமகளே சாய்வதற்கோ தேய்ந்தனைநீ?
நீளுலகில் என்றும் நிலைத்துநிலாப் பெண்மணியே
பாழுலகோர் நெஞ்சிற் பரிவுடனே நின்னை
நிலவுநில வென்றுரைப்பர்; நீயென்ன செய்வாய்!
நிலையாமை காட்டினைநீ; நெஞ்சத்துப் புக்கவளே,
நாளை பிற்ப்பாயோ? நான்மகிழ வாராயோ?
.தோளைப் புணர்ந்தின்பச் சொல்லமுது தாரோயோ?'
என்றெல்லா மேங்கி இரங்கிப் புலம்பிக்கண்
கன்றும் படியாகக் கண்ணீர் சொரிந்திருந்தான்;
விண்ணிற் கதிரோன் விடுத்தகண் ணீரினைத்தான்
மண்ணில் இருப்போர் மழையென்று கொண்டனரோ?
இன்பமுடன் துன்பம் இணைந்ததுதான் வாழ்க்கைஎன
மன்பதையோர் எண்ணி மனங்கொண்டு வாழ்வாரேல்
நல்ல குடும்பம் நடத்தி மகிழ்ந்திடலாம்
அல்லல் சிறிதுமிலை யாம்.

---

**பாடற் குறிப்பு:–** இராசிபுரம் தமிழ் இலக்கியப் பெருமன்றக் கவியரங்கில் பாடியது – 25.9.1966.

**அருஞ்சொற் பொருள்:–**
1. மீனவர்–விண்மீன்கூட்டம். 2. பாய்–பரவி. 3. உடு–விண்மீன்.

## 23. நெல்லின் கதை

**(நூல்:–தமிழ் முழக்கம்)**

கலிவெண்பா

ஆண்டவற்கோர் ஆயிரம்பேர் ஆமென்பர்; நெல்லெனும்பேர்
பூண்டிருக்கும் என்றனுக்கும் பூட்டுந் திருநாமம்
எண்ணி லடங்காதிங் கேடெடுத்தாற் போதாது;
மண்ணிற் பெருகிவரும் மாண்பினைநான் கூறுகிறேன்;
சீரகத்துச் சம்பா சிறுமணிநல் சித்தடியான்
ஊரகத்தார் போற்றுகிற உயயக்கொண் டானென்பர்;
அம்பா சமுத்திரம் ஆலைமிகு கோவைதருஞ்
சம்பா எனஎன்னைச் சாற்றிப் புகழ்வதுண்டு;
கார்த்திகைச் சம்பா கருடன்சம் பாவென்று
நேர்த்தியுடன் என்னை நினைப்பவரும் உண்டு;
குதிரைவால் நல்யானைக் கொம்பனுடன் தங்கம்
புதுவகைய மல்லிகை போகிணி கிச்சடி
கைவிரைச் சம்பாவாய்க் காட்சி யளிப்பதுண்டு;
செய்விளையும் என்றனுக்குச் செப்பும்பேர் இன்னுமுண்டு;
முத்துவெள்ளை கட்டைவெள்ளை மொய்க்குங் கொடிவெள்ளை
சித்திரைக்கார் வெள்ளைக்கார் செப்பும் மணல்வாரி
பூங்கார் கருங்குறுவை பூம்பாளைப் பேரெல்லாம்
ஈங்கே எடுத்துரைத்தால் ஏதேது நேரமையா?
கூறும் மிளகியிலே கூடும் பெயர்களெல்லாம்
யாரும் அறிவாரே! அத்தனையும் போதாவென்
றாங்கிலப்பேர் சொல்லி அழைப்பதையுங் கேட்டிருப்பீர்;
ஈங்கெனக்கு நேர்சொல்ல யாரே இருக்கின்றார்?

பார்மிகுத்த மாந்தர் பசிநீக்கும் எண்ணத்தால்
சீர்திருத்தம் என்னைப்போற் செய்தவரார் இங்கே?
கடல்கடந்து நானோர் கலப்புமணஞ் செய்தே
இடர்களைய வந்துள்ளேன்; எல்லாரும் போற்றிஎனை
ஆடுதுறை என்றே அழைப்பதையுங் கேட்டிருப்பீர்
நீடுபுகழ் கொண்டஇந்த நெல்லுக்கு நேருண்டோ?
நாடோறும் வானொலியார் நத்திப் புகழ்ந்தென்னைப்
பாடாத நாளுண்டா? பத்தியுடன் என்பெயரைச்
சொல்லாத நாளுண்டா? வேளாண்மைத் தோத்திரங்கள்
இல்லாத நாளுண்டா? என்னருமைத் தொண்டரவர்;
செல்வ வளமிக்க சீமான் எனைப்போலப்
பல்வகைய ஊர்தி படைத்தவரார் இவ்வுலகில்?
.பேருந்து வண்டிகளில் பெட்புடன்நான் செல்வதுண்டு,
நீருண்ட மேகமென நீள்புகையைக் கக்கும்
தொடர்வண்டி ஏறித் தொடர்வதுண்டு; நீரில்
படர்வதெனில் நல்ல படகுண்டு கப்பலுண்டு,
காட்டுவழிச் செல்வதெனில் மாட்டுவண்டி ஏறிடுவேன்,
மேட்டுக் குடியார்போல் வேற்றுமைகள் பாராட்டேன்;
ஏந்திவர ஊர்திகள்நான் எத்தனையோ பெற்றிருந்தும்
மாந்தர் தலைகூட வாகனமாக் கொள்வதுண்டு;
நொந்திருக்கும் நோயொன்று வந்துவிடின் வான்பறந்து
வந்தெனக்குச் செய்யும் மருத்துவங்கள் எத்தனையோ!
நாடாள வந்ததொரு நல்வேந்தன் நானென்றால்
கூடா தெனமறுத்துக் கூறிடுவார் யாருமில்லை;
தஞ்சைத் தரணியிற்றான் என்றன் தனியாட்சி
நஞ்சைப் புலமெல்லாம் நல்லாட்சி செய்திடுவேன்;
காராளர் வந்தாடிப் பட்டமெனைச் சூட்டிடுவார்,
ஊராளும் நல்லமைச்சர் உண்டு துணையாக;
நானாளும் நன்னிலத்தை நச்சாக்க நல்லவரைப்
போல்நாளும் வந்துபுகின் பொங்கிக் களையெடுப்பேன்;
எல்லைஎன்று முள்வேலி இட்டே எனதுநிலம்
தொல்லைஒன்றுங் காணாமல் தொன்றுமுதல் காத்திருப்பேன்;
பொன்னகரைச் சுற்றிப் புறமதில்கள் வேண்டுமன்றோ?
முன்வளைத்த நால்வரப்பும் மொய்ம்புடைய கோட்டைகளாம்;
நெல்லுக்கே என்றிறைத்த நீரைக் கருணையினால்
புல்லுக்கும் ஆங்கே பொசியவைப்பேன்; அக்கருணை
போற்றாமல் என்னைப் புறக்கணித்து வந்தவிழல்
சேற்றோடு சேறாகச் சீரழியச் செய்துவிடப்
போராடும் காராளர் பொன்றாக் களமறவர்
ஏராளம் ஏராளம் என்பாற் பணிபுரிவார்;
மண்ணின் வலிமைமிகும் மார்பைப் பிளந்தெறியும்
எண்ணில் உழுகலங்கள் எல்லாம் படைக்கலங்கள்;
நாட்டை வலுப்படுத்த நான்விரும்பி எத்தனையோ
கோட்டை புகுந்தங்குக் கொண்டதுண்டு வெற்றிபல;
ஆர்க்கும் ஒலியோ டணிவகுத்து நிற்கின்ற
போர்க்களங்கள் போய்ப்புகுந்து போர்விளைத்து வந்தவன்நான்
இத்தனையும் பெற்றுள்ள என்னை அரசனெனச்
சொற்றமொழி யாரே துணிந்து மறுத்துரைப்பார்?
நெல்லே ருழவரெனும் நேரியரிங் கில்லைஎனில்
வில்லே ருழவரெங்கே? சொல்லே ருழவரெங்கே?
இவ்வண்ணம் என்பெருமை எவ்வளவோ ஈங்குளவாம்;
அவ்வளவும் சொல்லில் அடங்கிடுமோ? என்றாலும்
ஏனோ பதரென்றே என்குலத்தைத் தூற்றுகின்றார்?
நானோஇம் மாந்தர் நகைப்பிற் கிடமானேன்?
மக்களிலே மிக்கபதர் வாழ்வதனைக் கண்டிருந்தும்
தொக்கஅவர் கூட்டத்தைத் தூற்றா திருக்கின்றார்;
வைக்கோலாய் மற்றும் உமிதவிடாய் வந்தாலும்
எக்காலும் அவ்வடிவில் என்னால் உதவியுண்டு;
மக்கள் பதரானால் மாநிலத்தில் யாருக்கும்
தக்க உதவி தருவாரோ? தந்ததிலை;
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர் என்றென்னைப்
பண்டொருவர் நன்முறையிற் பாராட்டிச் சொன்னாலும்
நெஞ்சந் துணிந்தொருவர் நெல்லுமுயிர் அன்றென்று
வெஞ்சொல் மொழிந்தென்றன் விஞ்சு புகழ்குறைத்தார்;

செல்வமென என்னைத்தான் செப்பிடுவர் முன்பெல்லாம்
வல்வினையர் செல்வமென மற்றவற்றை இன்றுரைப்பர்;
காராளர் ஓட்டுங் கலப்பை வகுத்தவழி
நீராலே வாழ்ந்து நிலத்தில் இடுந்தழையால்
நாளும் உரம்பெற்று நன்கு செழித்தோங்கி
நீளும் பயிராய் நிமிர்ந்தெழிலாய் நின்றிருப்பேன்;
பால்பற்றிச் சூல்முற்றிப் பையத் தலைகுனிவேன்;
நூல்கற்ற பாவாணர் நுண்ணியதங் கற்பனையால்
பற்பலவாக் கட்டுரைத்துப் பாடி மகிழ்ந்தார்கள்;
எற்குற்ற ஓர்கவலை யாரே அறிவார்கள்?
முற்ற முதிர்ந்தோமே முன்னே விதைத்தவர்கள்
உற்றரி வாளுடனே ஓடி வருவாரே
வாளோடு வந்தவர்கள் தாளோ டரிவாரே
தாளாது கட்டித் தயங்கா தடிப்பாரே
மாடேற்றி என்தலையை வந்து மிதித்திடுவார்
சூடேற்றி வேகவைத்துத் தொல்லை தருவார்
இடிப்பார் அரைப்பார்என் தோலை உரிப்பார்
கடிப்பார் உலையில் கருணையின்றி வேகவைப்பார்;
மாவாக மாற்றி மனம்போன போக்கினிலே
நாவாய் சுவைத்திடவே நாலுவகைப் பண்டங்கள்
செய்வாரே என்றுளத்தில் சிந்தித்த காரணத்தால்
வெய்தே உயிர்த்துமனம் வெம்பித் தலைசாய்த்தேன்;
என்னை உருவாக்க எத்தனையோ பாடுபட்ட
பொன்னன் குடிலுக்குட் போகவிட எண்ணாமல்
மன்னன் எனவாழ்வோன் மாமனைக்குக் கொண்டுசென்
றென்னைக் களஞ்சியத்தில் இட்டு நிறைப்பாரே;
போட்டு மறைப்பாரே பொல்லாங்குக் காரரென
நாட்டு நடப்புணர்ந்து நான்தலையைத் தொங்கவிட்டேன்;
மெய்யாகக் கற்றவர்க்கு மேலாம் உவமைசொலிப்
பொய்வாய்ப் புலவர்மனம் போனபடி பாடிவிட்டார்;
எத்தனைதான் என்னை இடர்ப்படுத்தி நின்றாலும்
பித்துலகங் கொண்ட பெரும்பசியைப் போக்குதற்கே
ஏற்றுள்ளேன் இம்மேனி; என்றும் பொதுநலமே
போற்றிடுவேன் துன்பம் பொறுத்திடுவேன் ஈதுறுதி;
நாடெல்லாம் வாழ நனிதுயரம் நான்பெற்றேன்
பாடெல்லாம் நான்வாழப் பட்டான் உழவன்மகன்;
ஆனால் அவன்வாழ யாரே நினைக்கின்றார்?
மேனாள் முதலாக மேழித் தொழிலுக்கும்
அத்தொழிலை ஆற்றும் அருமை உழவர்க்கும்
மெத்த புகழுண்டு மேன்மையுண்டு பாட்டினிலே;
நாட்டினிலே மாறாய் நடப்பதைத்தான் காண்கின்றேன்;
ஏட்டில் எழுதியதைக் காட்டிஎனை ஏய்க்கின்றார்;
நாணயத்தைச் சேர்ப்பதற்கு நாணயத்தை விற்றுவரும்
வாணிகத்தார் என்றன் வளர்புகழைக் கொல்கின்றார்;
ஊறவைத்து நாறவைத்து – ஊரெல்லாம் எற்பழித்துக்
கூறவைத்த அந்தக் கொடுமைக்கோர் எல்லையுண்டா?
நாட்டில் நடக்கவிட நாடாமல் எங்கெங்கோ
போட்டுப் பதுக்குகின்றார் போலிக் கயவரெனைக்
கண்டகண்ட திக்கிற் கடத்திக் கொடுபோகும்
தொண்டர்களைக் காணுங்கால் தூவென் றுமிழீரோ?
நாட்டு நலங்கருதும் நான்வாழும் நன்னிலத்தைக்
கேட்டுக் குணம்படைத்துக் கீழ்வாழை செங்கரும்பு
கூடிக் கவர்வதற்கோர் கொள்கை வகுத்திடுமேல்
வேடிக்கை பார்க்க விழைவேனோ? என்னையிங்கு
வாழ விடுங்கள் வளர விடுங்களெனத்
தாழ உரைத்திடுவேன் தாண்டிவரின் போர்தொடுப்பேன்
மக்கள் பொதுவாழ்வு மங்கலமாய்ப் பொங்கிவரத்
தக்க வழிசெய்து தன்னாட்சி ஓங்கிடவே
எண்ணி உழைத்திடுவேன் என்பணிக்கு நற்றுணையாய்
நண்ணி வருவீர் நயந்து.

---

**பாடற்குறிப்பு:–** திருச்சி வானொலி நிலையம் பொங்கல் விழாக் கவியரங்கில் பாடியது – 14.1.1968.

## 24. மரத்தின் பெருமை

(நூல்:—தமிழ் முழக்கம்)

மரமென்றால் எல்லாரும் [1]எண்மை யாக
　　மதிக்கின்றார்; உண்மையினில் மாந்த ருக்குக்
கரவின்றி உதவுவதில் அதனைப் போலக்
　　கண்டதிலை; நன்றிசொலி வாழ்த்த லின்றித்
தரமின்றிப் பழிக்கின்ற நிலைமை கண்டோம்;
　　தண்ணென்ற நிழல்தந்து, காற்றுந் தந்து,
வருகின்ற மேகத்தைக் குளிரச் செய்து,
　　வான்மழையைப் பெய்விக்கும் மரத்தின் கூட்டம். 1

விதையென்னும் சிறுமுதலைப் போட்ட பின்னர்
　　வியன்பெரிய மரமாகிப் பூத்துக் காய்த்துச்
சதையுடைய சாறுடைய கனிகள் ஆக்கிச்
　　சார்ந்தோர்க்குச் சுவைநல்கிப் பசியை நீக்கி
விதைமுதலாம் ஒருவிதையைப் பன்னூ றாக
　　விளைவித்துக் கண்டுமுதல் பெருக்கிக் காட்டும்
கதையுடைய மரம்போல வணிகப் பாங்கு
　　கற்றவரை யாண்டுலகிற் கண்டோம் நாமே. 2

மாடங்கள், கூடங்கள் தோன்றா முன்னர்
　　மக்களுக்குக் கல்விதனைப் புகட்டு தற்குப்
பாடங்கள் அறிவுறுத்தித் தந்த தெல்லாம்
　　படர்ந்துவளர் மரத்தடிதான்; எழுதி வைத்த
ஏடந்த மரந்தந்த பிச்சை யன்றோ?
　　எழுத்துணர்த்தும் ஆசானும் வாழ்ந்த சிற்றில்
ஓடறிந்த துண்டோஅும் மரமே தந்த
　　ஓலைகளே மேற்பரப்பை அழகு செய்யும். 3

கல்லடிகள் பட்டாலும், தலையில் ஏறிக்
　　காலடிகள் வைத்தாலும், கழிகள் கொண்டு
வல்லமையின் எறிந்தாலும் பொறுமை மேவி,
　　வாய்திறந்து பேசாமல் கனிகள் நல்கி
நல்லபயன் செய்துவரும் மரங்க ளெல்லாம்
　　நாட்டுக்கோர் நீதிதனை நவின்று நிற்கும்;
செல்வமிகப் பெற்றவர்கள் மற்ற வர்க்குஞ்
　　செய்திடுக ஒப்புரவென் றுணர்த்திக் காட்டும். 4

வேர்கொடுக்கும், பால்கொடுக்கும், வெட்டு வோர்க்கு
　　மேற்பட்டை கொடுத்திருக்கும், பற்றும் நோயின்
வேர்கெடுக்கக் காய்கொடுக்கும், பூக்கொ டுக்கும்
　　விளைந்துவருங் கனிகொடுக்கும், இலைகொ டுக்கும்;
'ஆர்கொடுக்க வல்லார்கள் என்னைப் போ'லென்
　　றருமருந்து மரமொன்று நிமிர்ந்தி ருக்கும்;
பேர்படைத்த செல்வரெலாம் பிறரும் வாழப்
　　பெருந்துன்பம் உறும்போதும் வழங்கச் சொல்லும். 5

படரஒரு வழியின்றி மயங்கி நிற்கும்
　　பைங்கொடிகள் தழுவுதற்கும் இடங்கொ டுக்கும்;
படபடெனச் சிறகடித்துப் பறந்து சுற்றும்
　　பறவையினந் தங்குதற்குங் கைகொ டுக்கும்;
உடலினையும் சிலபறவை ஓட்டை செய்தே
　　உறைவிடமாக் கொண்டிருக்க உவந்த ளிக்கும்;
மடமடெனச் சாய்கின்ற நிலைவந் தாலும்
　　மங்கையர்கள் அடுப்பெரிக்க விறகு நல்கும். 6

காட்டுமரம் என்றாலும் மீன வர்க்குக்
　　கட்டுமர மாகி,அது கடலில் ஓடும்;
நாட்டரசன் கையகத்துஞ் செங்கோ லாகி
　　நல்லாட்சி புரிகின்ற குறியைக் காட்டும்;
கேட்டுணரும் மாணவரை முறைப்ப டுத்தக்

கேள்விமிகும் ஆசான்கைக் கோலாய் நிற்கும்;
வீட்டகத்தே தூணாகிப் பிறவும் ஆகி
விளைக்கின்ற பயனெல்லாம் விளம்பப் போமோ? 7

இடுக்கண்கள் பலவாகிச் சூழ்ந்த போதும்
இயல்பொன்றுங் கெடுதலிலாச் சான்றோர் போல
அடுத்தடுத்துத் தேய்த்தாலும் சிறிது கூட
அதற்குரிய மணங்குன்றா மரங்க ளுண்டு;
படுக்கின்ற நிலையுற்ற பெற்றோர் தம்மைப்
பரிவுடனே தாங்குகிற மக்கள்போல,
விடுக்கின்ற வேர்சிதைந்து முதிர்ந்த காலை
விழுதுகளால் தாங்குகிற மரங்க ளுண்டு. 8

ஓங்குபுகழ் இவ்வளவுங் கொண்டி ருந்தும்
ஓரிரண்டு குறைகளையும் பெற்ற துண்டு;
தீங்குடைய கீழ்மக்கள் தாம்பி றந்த
தேயத்தைக் கேடுறவே செய்வ தைப்போல்
நீங்கரிய காட்டகமாந் தாய கத்தை
நெருப்பதனால் கேடுறுத்தும் மரமும் உண்டு;
மூங்கிலெனும் அம்மரந்தான் மோதி மோதி
முன்பிறந்த வீட்டுக்கே கொள்ளி வைக்கும். 9

அரம்போலுங் கூர்மைமிகும் அறிவ ரேனும்
அயலவர்தம் துயர்க்கிரங்காச் சிலரைப் போல
மரஞ்சூழும் காட்டகத்தே அருகில் நிற்கும்
மரமொன்று வாடுகிற பொழுது கண்டும்
இரங்காமல் நிற்கின்ற குணமும் உண்டாம்,
ஈடில்லாச் செல்வவளம் பெற்றி ருந்தும்
உறங்காமல் காத்திருக்குங் கஞ்சன் போல
ஒருகனியும் உதவாத எட்டி யுண்டு. 10

தோன்றிவரும் நாள்தொட்டு மடியுங் காறும்
துணைசெய்யும்; மடிந்தபினும் பயனே நல்கும்;
ஊன்றிவளர் வேர்முதலாத் தன்பா லுள்ள
உறுப்பெல்லாங் கொடுத்துதவும்; உயிரும் ஈயும்;
மான்திரியுங் காட்டகத்தும் மாந்தர் வாழும்
நாட்டகத்தும் மதில்சூழும் வீட்ட கத்தும்
வான்தடவித் தலைவிரித்து நிமிர்ந்து நிற்கும்;
வாழ்வெல்லாம் பிறருக்கே ஆக்கி நிற்கும். 11

பேசுமொழி கண்டறியா முன்னர் மாந்தர்
பெருங்கிளையிற் பரணமைத்து வாழ்ந்த துண்டு;
வீசுபுயல் வேகத்துப் புரவி யோடு
வினைமிக்க தேர்ப்படையும் வேந்தன் றானும்
காசுபண மில்லாமல் தங்கு தற்குக்
காற்றுநிழல் அத்தனையும் தந்தி ருக்கும்;
மூசுபுகழ் மூவேந்தர் தலையிற் சூடும்
மும்மலரும் தந்ததெது? மரமே யன்றோ? 12

கொஞ்சுமொழிச் செல்வத்தைத், தன்னை ஏற்றுக்
கொண்டவளைப் பஞ்சணையில் தனிக்க விட்டு,
மஞ்சுதவழ் வான்மாடங் கொண்டி லங்கும்
மாமனையை நீத்தகன்று, செல்வ வாழ்வோ
[2]தஞ்சமெனத் துறந்தோடி, நாட்டு மக்கள்
தவிப்பகற்றத் துயர்துடைக்க வழியைத் தேடி,
அஞ்சுபொறி காத்தவனாம் புத்தன் வந்தான்
அரசமரத் தடியில்தான் ஞானம் பெற்றான். 13

உள்ளத்தை உருகவைக்கும் வாச கத்தை
உலகுக்குச் சொன்னமணி வாச கர்க்கு
வெள்ளத்துச் சடைமுடியன் ஞானம் ஓதி
விளக்கியதும் குருந்தமரத் தடியில் என்பர்;
கள்ளத்தைப் பாவத்தை நீக்கும் என்றே
கைதொழுது வணங்கவரும் ஏசு தன்னை

அள்ளிக்கொண் டிலங்குகின்ற சிலுவை தானும்
அம்மரத்தின் உறுப்பளித்த சலுகை யன்றோ? 14

சொல்லாலும் எண்ணாலும் அளக்க வொண்ணாச்
சோதியனாம் பரமனவன், கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் மறைகள் காணா
வாக்கிறந்த நிறைபொருளாய், உலகில் உள்ள
எல்லாமாய், அல்லதுமாய் இருந்த பாங்கை
இருந்தபடி அப்படியே இருந்து காட்டிக்
கல்லாலின் புடையமர்ந்தே சொன்னான் என்பர்;
கடவுட்கும் மரத்தருமை தெரிந்த தன்றே. 15

---

**பாடற் குறிப்பு:–** திருச்சிராப்பள்ளி தேசியக்கல்லூரிக் கவியரங்கில் பாடியது – 28.2.1970.

**அருஞ்சொற் பொருள்:–**
1. எண்மை – எளிமை. 2. தஞ்சம் – எளியது (அற்பமானது).

## 25. புகைப் புராணம்
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

வெண்புகைச் சுருட்டை விரலிடைப் பற்றி
ஒண்முகஞ் சுருங்க உறிஞ்சிடும் காளையர்
வாயுட் புகுந்து மூக்கின் வழிவரும்
மாயச் செயல்செயும் மந்திர வாதிநான்;
நெருப்புள இடத்தைப் பொறுப்புடன் உணர்த்தி
முறைக்கடன் ஆற்றும் முன்னறி விப்பு;
அரிவையர் தமக்கே அழுதுகண் ணீர்விடல்
உரிமைச் சொத்தாம் உலகினர் உரைப்பர்;
போர்முகங் கண்ட தார்முக வீரரும்
நேர்முகங் காட்டி நின்றிடின் என்முன்
கண்களைக் கசக்கிக் கலங்கிடச் செய்யும்
எண்ணரும் வீரம் என்பா லுண்டு!
பத்தியால் அடியவர் படத்தின்முன் கொளுத்திய
பத்தியில் வளைந்தும் நெளிந்தும் படருமென்
அத்தனை அழகும் அரிவையர் கண்டுதான்
தத்திட தாகிட தாமென நடனம்
முத்திரை வைத்தவர் முயன்று பயின்றனர்;
அடுப்படி அறையில் ஆட்சி புரிவேன்
தடுத்திடும் சுவர்களின் தளதள முகத்தில்
வடுப்படக் கரியை வாரிப் பூசுவேன்;
மடைப்பளி மேற்புறம் மன்னவன் எனக்குத்
தனிவழி அமைப்பர் தலைநிமிர்ந் தேகுவேன்
எனைவழி மறித்திட எவரால் இயலும்?
குடில்களில் வேய்ந்த கூரைகள் ஓடுகள்
தடைசெயின் அவற்றிடைத் தப்பிப் புகுந்து
வெளிவரு வேன்எனை விஞ்சியோர் எவருளர்?
என்றும் சான்றோர் எண்ணம் போல
நின்றுமேல் நோக்கி நிமிர்ந்தெழும் இயல்பினேன்;
தடுத்துப் பிடித்துத் தடைசெயச் சிறைசெய
எடுத்திடும் முயற்சிகள் என்னிடம் தோற்கும்;
புகுதற் கியலாப் புல்லிய இடத்தும்
புகலால் என்பெயர் புகைஎனப் புகல்வர்;
நல்லியல் மாதர் [1]நடுவினை நிகர்த்திடும்
மெல்லிய உருவில் மேவுவேன் எனினும்
பல்வகை ஆலையில் பருத்துள குழாயில்
விக்கிர மாதித்தன் வேதா ளம்போல்
உக்கிர மான உருவொடு வருவேன்;
மணம்படு பொருளிலும் மயங்கிநான் எழுவேன்;
பிணம்சுடு காட்டிலும் பேருலா வருவேன்;
ஆண்டியின் கையிலும் அடங்கி யிருப்பேன்
ஆண்டவன் முன்னரும் அடைக்கலம் புகுவேன்;

சிறுகுடில் ஆகினும் வளமனை யாகினும்
சிறியவன் எனக்குச் சிறப்பிடம் உண்டு;
நெருப்பின்றிப் புகையா நிலையினை உணர்வீர்
சிறப்புறும் என்புகழ் செப்பினேன் உமக்கே!

---

**பாடற் குறிப்பு:–** 24.09.1975ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. நடு – இடை.

## 26. களிதரு சுரும்பு

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

நிலை மண்டில ஆசிரியப்பா

மணம்விரி மலருள் நறவம் மாந்தித்
துணையுடன் திரிதரு சுரும்பே! நின்றன்
மென்சிற கொலியால் எழுப்பிடும் மெல்லிசை
நன்னர் யாழின் நரம்பினை வருடப்
படர்தரும் இசையின் பான்மைய தாகித்
தடஞ்செவி பாய்ந்துளம் தழைத்திடச் செய்தது;
புள்ளிகள் மேவிய பொன்னிறச் சிறகர்
அள்ளி யிழைத்திடும் அழகின் வண்ணம்
கண்ணுக் கினியதோர் காட்சியாய்த் திகழ்ந்தது;
கண்ணுங் கருத்துங் களிகொளச் செய்யும்
பண்ணும் எழிலும் படைத்தனை! வாழிய!
நின்செயல் என்னை நெகிழச்செய் ததுவே!

## 27. கல் சொன்ன கதை

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

தரையினில் மலையாய் நிற்பேன்
[1]தளிதனில் சிலையாய் நிற்பேன்
பொறைமிகு தூணும் ஆவேன்
பொடிபடும் கல்லும் ஆவேன்
அரைபடும் அம்மி யாவேன்
ஆடிடுங் குளவி யாவேன்
நெறியினை ஒழுங்கு செய்ய
நிரப்பிடுஞ் சரளை ஆவேன் 1

விலையிலா மணிக ளாவேன்
வெறும்பரற் கல்லும் ஆவேன்
மலையெனப் பெரியோ னாவேன்
மணலெனச் சிறுவ னாவேன்
விலைமிகு மாளி கைக்குள்
விந்தைசேர் வடிவில் நிற்பேன்
குலைவுறுங் கூரை வேய்ந்த
குடிலுக்குந் துணையாய் நிற்பேன் 2

ஆடையை வெளுப்பார் என்மேல்
அடிப்பினும் உதவி நிற்பேன்
ஆடுமென் தலையைப் பற்றி
ஆட்டினும் அரைப்பேன் மாவை
பாடுகள் படுத்தும் அந்தப்
பாவையர் என்னை அம்மி
மேடையில் உருட்டும் போழ்தும்
மிளகுகாய் அரைத்தே நிற்பேன் 3

இவ்வணம் உதவல் கண்டும்
இளகிடா மனத்துக் கென்னை

எவ்வணம் உவகை சொல்ல
இசைந்ததோ உலகம்? பாடம்
செவ்வணம் பயிலாப் பள்ளிச்
சிறுவர்தங் கையிற் சிக்கின்
அவ்வவர் விருப்பம் போல
அழிவுகள் பலவுஞ் செய்வேன் 4

சிற்றுளி கொண்டே என்னைச்
சிதறிட உடைப்பார் மாந்தர்
மற்றவர் உண்ணும் போது
மறைந்திருந் துடைப்பேன் பல்லை;
கொற்றவர் போலே எண்ணிக்
குனிந்திட லின்றிச் சென்றால்
உற்றவர் அறியும் வண்ணம்
ஒருசிறி திடறி வைப்பேன் 5

படியெனக் கிடந்தால் கால்கள்
பதியஎன் தலைமேல் வைப்பார்;
வடிசிலை யானால் தாளில்
வருபவர் தலையை வைப்பார்;
படிகிற நிலையைக் காணில்
பண்பிலார் மிதிப்பர் ஆனால்
முடியினை நிமிர்த்து நின்றால்
முடங்குவர்; என்னே மாந்தர்! 6

கருவழி கடப்பார் நெஞ்சில்
கடவுளென் றென்னை வைப்பார்;
அருவழி கடப்பார் சாலை
அருகினில் நிறுத்தி வைப்பார்;
இருவரும் எனையே எண்ணி
ஏகுவர் மேலும் மேலும்;
பெருமைகள் அனைத்தும் நானே
பேசுதல் முறைமை யாமோ? 7

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. தளி – கோவில்.

## 28. கடலின் பெயர்கள்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

கண்ணுக்கும் எட்டாது கடந்து நிற்கும்
காரணத்தால் உனைக்கடலென் றழைத்தார் முன்னோர்;
எண்ணுக்குள் அடங்காத புனற்ப ரப்பை
ஏற்றுளதால் பரவையென இயம்பி நின்றார்;
உண்ணற்கோ உவர்ப்புடையாய் அதனா லுன்னை
உவரியெனப் பெயருரைத்தார்; மலையி னின்று
மண்ணுக்குள் ஓடிவரும் எல்லா ஆறும்
மருவியுனைப் புணர்வதனால் புணரி என்றார். 1

அளக்கரிது நின்பெருமை எனவு ணர்ந்தே
அளக்கரெனப் பெயரிட்டார்; அலை யெழுப்பி
முழக்குகிற வேலையினை ஓய்வே யின்றி
முப்பொழுதும் செய்வதனால் வேலை என்றார்;
விளக்கமுறச் சொலமுடியா ஆழங் கொண்டு
விளங்குவதால் ஆழியென்றார்; ஆக்க லோடும்
அழித்தலெனக் காத்தலென மூன்று நீர்மை
அமைந்தமையால் முந்நீரென் றானாய் இங்கே, 2

ஆரமுடன் பவழமெலாம் வாரி வாரி
அளிப்பதனால் பயன்பெறுவோர் வாரி என்றார்;
வாரெனுஞ்சொல் நீட்சிஎனும் பொருளைக் கொண்ட
வாய்மையினால் நீண்டவுனை வாரி என்று

பேரெழுதி வைத்தனரோ? யாரே கண்டார்!
பேருலகில் அமைதியினைக் காணா தென்றும்
நேரமெலாம் சலசலவென் றொலிப்ப தாலே
நினைச்சலதி எனவுரைத்து மகிழ்ந்தார் போலும்! 3

---

**பாடற் குறிப்பு:–** 27.11.1980 ஆம் நாள் பாடியது..

## 29. மலையிற் பிறந்த மகள்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

விண்ணகத்து வான்வழியில் நடந்து வந்த
மின்விழியன் இடிக்குரலன் முகிலன் என்பான்,
மண்ணகத்தே திமிர்ந்தெழுந்து நிமிர்ந்து நிற்கும்
மலைமகளின் எழில்கண்டான் காதல் கொண்டான்;
பண்ணிசைக்குங் குயிலினங்கள் பாடி நிற்கப்
பறந்துவரும் சுரும்பினங்கள் வாழ்த்தொ லிக்கப்
பெண்ணவட்குக் கொழுநனென ஆகி விட்டான்;
பின்னரவள் மெல்லுடலைத் தழுவி நின்றான். 1

பலநிறத்துக் குலமலர்கள் விரிந்து நிற்கப்
பையவரும் மென்காற்று மெய்யில் வீச,
நலமிகுந்த மலைமகளோ தழுவி நின்ற
நாயகன்றன் நெஞ்சத்தைக் குளிரச் செய்தாள்;
கலவிக்குப் பின்முகிலன் துளிகள் சிந்தக்
கருக்கொண்ட மலையரசி உயிர்த்து நின்றாள்;
கலகலத்த குரலெழுப்பும் அருவி என்ற
காதல்மக வீன்றெடுத்தாள் அந்த நங்கை. 2

பெற்றெடுத்த பிள்ளையினைத் தனது மார்பில்
பேதையவள் தத்திவிளை யாட விட்டாள்;
கற்றொடுத்த இடமெல்லாம் தவழ்ந்து தத்திக்
கனிமரங்கள் இடைப்புகுந்து குதித்துத் தாவி
மற்றடுத்த பள்ளமெலாம் விழுந்தெ ழுந்து
மலர்க்கொடிகள் செடிகள்பல பறித்தெ றிந்து
கற்றடுக்கச் சலசலக்கும் மழலை பேசிக்
கண்குளிர ஆடிவந்த தந்தப் பிள்ளை. 3

தன்னிடையில் வைத்திருந்த பிள்ளை தன்னைத்
தரையின்மிசை இறக்கிவிட, அருவி என்ற
முன்மருவும் பெயர்மாறி, உருவம் மாறி
முழங்கிவரும் ஆறென்னும் பெயரைப் பெற்றாள்!
பின்னரவள் முல்லைநிலக் காடு புக்குப்
பீடுபெற நடந்துவந்தாள்; முல்லை என்ற
கன்னியொடு தோழமைகொண் டுலவி வந்தாள்;
காடெல்லாம் குழலோசை இனிக்கக் கேட்டாள். 4

மருதமெனும் நிலம்புகுந்து தங்கித் தங்கி
மனமகிழ்ந்து நடைபயின்றாள்; உழவ ரெல்லாம்
வருகவென வரவுரைத்தார்; மகிழ்ந்து போற்றி
வாழ்த்துரைத்தார்; கலைபலவும் விரித்து வைத்தார்;
இருபுறமும் பசுஞ்சோலை செழித்து நிற்க
இயற்கைஎழில் எவ்விடத்தும் குலுங்கி நிற்க
மருவுகிற வயலெல்லாம் பசுமை யாக்கி
மாந்தருளம் செம்மையுற நடந்து சென்றாள். 5

மலையகந்தான் ஆற்றுக்குப் பிறந்த வீடு;
வளமலிந்த கடற்பரப்பே புகுந்த வீடு;
தொலைவறியா வளமுடைய முல்லைக் காடு
தூயவட்குச் சிற்றன்னை; அவட்க டுத்த
கலைமலிந்த காமலிந்த மருதம் அந்தக்
காரிகைக்குத் தாய்மாமன், மகிழ்ந்து பெற்ற

தலைமகளைப் புக்ககத்துக் கனுப்பும் போது
தாய்தந்த சீர்வரிசைக் களவே யில்லை. 6

சந்தனங்கள் தொகுத்தளித்தாள், தினைய ளித்தாள்,
சாதிமரத் தேக்களித்தாள், மதங்கொள் யானைத்
தந்தங்கள் பலவளித்தாள், மணியும் முத்தும்
தங்குதடை யில்லாமல் வாரித் தந்தாள்;
'வந்தெங்கள் கலிதீர்த்த மகளே, வேண்டும்
வளமெல்லாம் வாரிப்போ' என்று சொன்னாள்;
சொந்தங்கள் குறைசொல்லக் கூடா தென்றே
சொலற்கரிய சீர்வரிசை தந்தாள் அன்னை. 7

முல்லைஎனும் சிற்றன்னை, தன்பால் வந்த
முதல்மகளைத் தலைநீவி உச்சி மோந்து
மல்லிகையால் தலைக்கோலம் செய்து விட்டு
மான்கன்றும் விளையாடத் தந்தாள்; மேட்டுக்
கொல்லைதரும் அவரையொடு வரகு சாமை
கொழுந்துவரை முதலான பொருள்கள் தந்தாள்;
பல்வகைய மலர்சூட்டிப் பாலும் நெய்யும்
பரிந்தளித்து வாழ்த்துரைத்து நின்றாள் அங்கு. 8

மருதமெனும் மாமனவன் தன்பால் வந்த
மலையரசி மகளைத்தா மரைமு கத்தால்
பெருமகிழ்வு காட்டிவர வேற்று நின்றான்;
பேராம்பல் மலர்சூட்டி வாழ்த்தி நின்றான்;
மருமகளின் மனமகிழ நெல்ல ளந்தான்;
வாழையொடு கமுகுதரும் குலைகொ டுத்தான்;
திருவுடையன் வளம்பலவும் உவந்த ளித்துச்
செங்கரும்பும் வந்தவட்குத் தந்து நின்றான். 9

பெற்றவரும் மற்றவரும் மகிழ்ந்து தந்த
பெருமைமிகு சீர்வரிசை அனைத்துங் கொண்டு
நற்றுணைவன் கடற்பேரான் அவனை நோக்கி
நயந்தோடி நலம்பாடி விரைந்து சென்றாள்;
மற்றவனும் பெருமகிழ்வால் அவளைத் தாவி
மார்பிறுக மனமுருக அணைத்துக் கொண்டான்;
பெற்றுவரும் வரிசைஎலாம் கொள்க என்றாள்;
பெருமகனோ அலைக்கையால் கொள்ளேன் என்றான்10

---

**பாடற் குறிப்பு:–** திருச்செங்கோடுக் கவியரங்கில் பாடியது.

## 30. வான்மழையே வா!
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

வான்மழையே! வளங்களெல்லாம் வழங்குந் தாயே!
வளர்கருணைக் கருமேனி **வெள்ளை** யாகி
ஏன்மழையே பொழியாது **வஞ்சித்** தாய்நீ?
இருநிலத்துக் **கலி**படர உளங்கொண் டாயோ?
ஆன்முதலாம் உயிரினங்கள் கதறு கின்ற
**அகவ**லெலாம் படவிலையோ நினது காதில்?
ஈன்வயிறு மக்களிடர் கண்டும் வாளா
இருந்திடுமேல் **மருட்பாடு** தோன்று மன்றோ? 1

**நெடிலடி**யால் நீநடக்க வேண்டு கில்லோம்
நிலஞ்சிரிக்க **அளவடி**யால் நடந்தாற் போதும்;
அடிகுறையுஞ் **சிந்தடி**யால் கால்கு றைந்த
**குறளடி**யால் அடிபிறழ ஊர்ந்து வந்தால்
[1]படிவறளும் படியாகும்; பருவத் தேஇப்
படிநடந்தால் எப்படியிவ் வுலகம் உய்யும்?
இடிதவழக் கொடிபடரும் மின்னல் பாய
[2]ஏரடிகள் நடைபயில வருவாய் இன்றே! 2

**அசை**யாத பொருளுக்கும் உலகில் உள்ள
**அசை**கின்ற பொருளுக்கும் பசையாய் நிற்பாய்!
இசையால்நின் **சீர்**முழுவதும் எடுத்துச் சொல்ல
**எழுத்த**னைத்தும் சேர்த்தாலும் முடியா தம்மா!
நசையால்நின் **னடி**தொட்டுத் **தொடைகள்** சூட்டி
நாளெல்லாம் தொழுகின்றோம் அழுது நின்றோம்
பசியாலே **தளை**யுண்ட மக்க ளுக்குப்
பாலமிழ்தம் பொழிவதுநின் கடமை யன்றோ? 3

ஏருழவன் பாட்டுக்குப் **பொழிப்பு மோனை**
**இணைமோனை** யாகி**அணி** கூட்டி நிற்பாய்!
மாரியென நின்பெயரைச் சொல்ல லன்றி
மாறியென ஒருநாளும் உரைத்த தில்லை;
பாருழல **முரண்டொடை**யாய் மாறி நின்றாய்!
பயன்முழுதும் **செந்தொடை**யாய் மாறிற் றம்மா!
காருனது மனத்**தியைபுத் தொடை**பொ ருந்தக்
கருணைமழை பொழிந்தருள்வாய் உலகம் உய்ய. 4

**மயங்கிசை**யும் **தாழிசை**யும் கேளா **வண்ணம்**
மழையோசை கேட்கட்டும்; செய்யுள் எல்லாம்
பயன்கெழுமி வளங்கொழிக்கத் **துள்ளல்** ஓசை
பரவட்டும் வனப்புமிகும் இல்ல மெல்லாம்
வயங்கிழையார் வளையோசை பொங்கப் பொங்கல்
வழங்கட்டும்; **புறநடை**யில் மாந்தர் செல்லா
தியங்கட்டும்; **ஒழுகிசை**வான் வழங்க எங்கும்
இன்பமெலாம் பொங்கட்டும், மழையே வாவா. 5

---

**பாடற் குறிப்பு:**—வான்பொய்த்த போது வருந்திப் பாடிய பாடல் – 9.12.1974.
**(இத்தலைப்பில் உள்ள பாடல்களில் யாப்பிலக்கணச் சொற்கள் பயின்று வந்துள்ளன. அவற்றின் பொருள் நயங்கண்டு மகிழ்க.)**